சு. வெ. தங்கசாமி,
5, மந்தவெளிசந்து, மயிலை.

தென்றல்

ஆசிரியர்:- கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 2 | சென்னை | 17—4—56 | செவ்வாய்க்கிழமை | இதழ் 44

மூவர் கற்பில் மூத்த கற்பு!

8-4-56 ஞாயிறன்று சென்னை கோகலே மன்றத்தில் சி. பி. சிற்றரசு அவர்களின் 'தீச்சுடர்' நிதிக்காக நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் நானும் கலந்து கொண்ட போது சுவையான கேள்வி ஒன்று கேட்கப்பட்டது.

"கண்ணகி, கோப்பெருந்தேவி, மாதவி இம்மூவரின் கற்பில் எவர் கற்பு உயர்ந்தது?" என்பதுதான் அது.

கேள்வி கேட்ட நண்பர் திறமையாளர் என்பதைக் கேள்வி காட்டுகிறது. கண்ணகி, கோப்பெருந்தேவி இரண்டு பேரை மட்டுமே குறித்துக் கேட்கப்பட்டிருப்பின் அறக்கற்பு, மறக்கற்பு, எனப்பிரித்து விடையுரைத்தல் எளிதில் இயலும். கூட மாதவியையும் சேர்த்துக் கேட்டார் நண்பர். ஆகவேதான் இந்தக் கேள்வி ஆராய்ச்சிக்கு நிறைய வேலை கொடுத்தது. இலக்கிய மரபின்படி ஒருவனையே எண்ணி, ஒருவனையே கரம்பிடித்து அந்த ஒருவனுடனேயே வாழ்ந்த மூவரைப் பற்றியும், சிலப்பதிகாரம் நமக்கு ஒரே விடையைத்தான் தந்திருக்கிறது. அதாவது, மூவரும் கற்பிற் சிறந்தவர்களே என்பது. மூவரும் சிறந்தவர்கள்-சரி; ஐயமில்லை. ஆனால், அந்த மூவரிலே மூத்தவர் யார்? இதுதான் ஆராய்ந்து காணவேண்டிய சிக்கல்,

கற்பு என்று சொன்ன உடனேயே கண்ணகிதான் எவர் நினைவிலும் முதலில் எழக்கூடும். நெறியான வாழ்வோடு அவள் சாதித்ததாகச் சொல்லப்படும் சாதனைகள் மற்ற இருவரிடத்தும் காணப்படாததால் இயல்பாகவே கண்ணகிக்கு முதலிடம் தருகிறது இலக்கியத்தில் ஆழ்ந்த இதயம்.

போதிலார் திருவினாள்
புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின்
திறமிவள் திறமென்றும்
மாதரார் தொழுதேத்த
வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்
மன்னும் கண்ணகி......,

--எனச் சிலம்பு சிறப்பிக்கும் கண்ணகி, கணவனிடத்துக் கொண்டிருந்த காதலும் அன்பும் மரியாதையும் 'பக்தி'யும் மட்டுமல்ல, அவளது கற்புக்குச் சான்றுக் காட்டப் பெறுவன. கணவன் பிரிவிற் கலங்கி, அழகொழிந்து வாழ்ந்ததிலும் கண்ணகிக்குப் பக்கத்திலேயே மாதவியும் நிற்கிறாள். எனின், கண்ணகி தனியே சிறப்பிக்கப்படுவதற்குக் காரணம் என்ன? "கணவற் பொருட்டு மன்னனிடம் வாதிட்டாள் - கணவற்பொருட்டு மதுரை நகரைத் தீயுண்ணச் செய்தாள்"-இவ்விரண்டும், கண்ணகி, தன் கற்புக்குச் 'செயல்படும் சக்தி' உண்டென்பதை நிரூபித்ததற்குச் சான்றுகளாகும். ஆகவேதான், எதிர்த்துச் செயல்பட்ட "கற்பினளான கண்ணகி," முதலிடத்து வைக்கப் பெறுகிறாள். மாதவியின் கற்பு 'வலுவான போராட்ட'த்தில் இறங்கவில்லை. கோப்பெருந்தேவிக்கு அப்படிப்பட்ட போராட்டத்தில் இறங்குவதற்கான வாய்ப்பில்லை. காரணம், நீதி தவறிய வேந்து அவள் கணவன் - அதை அறிந்து மாண்டவன்! யாரை எதிர்த்து கோப்பெருந்தேவி போரிட முடியும்? கணவன்தான் நீதி தவறியவன் என்பதை அறிந்தும் உயிரோடு உலவியிருந்தால், கோப்பெருந்தேவியின் கற்பும் போராட்டத்திற் செயல்படும் கற்புத்தான் என்பது விளங்கியிருத்தல் ஏலும். ஆனால், "மாவில்லை; ஆகவே பணியாரம் சுடவில்லை."

சரி; கற்பில் உயர்ந்தவர்கள் யார்? "ஒரே நினைவில் வாழ்ந்தவர் கள்-வாழ்பவர்கள்"- இதுதான் இலக்கணம், கற்பினருக்கு.

கண்ணதாசன்

கண்ணகி-அப்படி வாழ்ந்தாள்!

கோப்பெருந்தேவி-அப்படியே!

மாதவி-அப்படியே!

கண்ணகி, கோவலனோடு வாழுங் காலத்தில், மிக உற்சாகமாகவும், கணவரிடத்து மதிப்புடனும் வாழ்ந்தாள் என்கிறது சிலம்பு. இருவரும், "மண்மேல் நிலையாமை கண்டவர் போல், தொலையாத இன்பமெலாம்" பெற்றனர். கோவலன் அவளிடத்துக் காதல்கொண்டிருந்த வகையை மனையறம்படுத்த காதை நமக்கு விளக்குகிறது.

"நறுமலர்க் கோதைநின்
நலம்பா ராட்டுநர்
மறுவில் மங்கல
அணியே அன்றியும்
பிறிதணி அணியப்
பெற்றதை யெவன்கொல்!
பல்லிருங் கூந்தல்
இன்மல ரன்றியும்
எல்லவிழ் மாலையோ
டென்னுற் றனர் கொல்!
..................................."

—எனத் தொடங்கி, கண்ணகியின் இயற்கை அழகு இமையா அழகு எனவும், அதற்குமேல் வேறொரு அழகை அவளுக்குச் சூட்ட முற்பட்டவர்கள் பித்தர்கள் எனவும் கூறும் கோவலன்,

மாசறு பொன்னே!
வலம்புரி முத்தே!
காசறு விரையே!
கரும்பே! தேனே!
அரும்பெறற் பாவாய்!
ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வாணிகன்
பெருமட மகளே
....
—என்று
உலவாக் கட்டுரை பலபா ராட்டி,

—மகிழ்கிறான். இதில் மகிழ்வுற்ற கண்ணகி, இந்நாளில், கோவலன் மாதவியின்பால் செல்லவும்,

அஞ்செஞ் சீரடி அணிசிலம் பு ஒழிய
மென்துகில் அல்குல் மேகலை நீங்க
....
....
கையறு நெஞ்சத்துக் கண்ணகி...

—ஆகக் காட்சி தருகிறாள். கணவன் பிரிவில், அலங்காரம் பிரிகிறது. "அவரின்றி அணி எதற்கு? யார் காண?" எனக் கேட்பாள் போல, விதவை உருவிற் காட்சி தருகிறாள்.

உண்ணல்பூச் சூடனெஞ்
சுவத்தலொப் பனை
பண்ணலெல் லாமவர்
பார்க்கவே யன்றோ?

அண்ணல்தன் பிரிவினை
அறிந்துத் தோழிநீ
மண்ணவத் தனையிது
மடமை யாகுமால்!

—என 'விவேக சிந்தாமணி' காட்டும் பாடலும், இத்தகைய கருத்தைக் கொண்டதே! ஆகவே, கணவன் பிரிவில் அலங்காரந் துறந்து அழுது, கண்ணீர் பெருக்கி, அமைவுறும் கண்ணகி, ஒருநாள் தன் வேலைக்காரக் 'குறுமகள்' சொன்னதோர் இனிய செய்தியைச் செவிமடுத்தாள்;

"..................................'நீடிய
காவலன் போலும்
கடைத்தலை யான் வந்துநம்
கோவலன்என் றாள்ஓர்
குற்றிளையாள்"

—கண்ணகி, எழுந்து உட்கார்ந்து நிமிர்ந்து பார்க்கிறாள்.

......................."கோவலனும்
பாடமை சேக்கையுள்புக்கு
தன்பைங்கொடி
வாடிய மேனி வருத்தங்
கண்டு," யாவும்
சலம்புணர் கொள்கைச்
சலதியோ டாடிக்
குலம்தரு வான்பொருள்
குன்றம் தொலைந்த
இடம்பாடு நாணுத்தரும்
எனக்கு" என்ன......

—கணவனைக் கண்ட கண்ணகி மகிழ்கிறாள். ஆனால், அவள் வார்த்தையிலிருந்து, மாதவியிடம் தரப்பொருளில்லாததையே குறிப்பதாகப் புதுப்பொருள் கண்டு, "இரு சிலம்புகளை ஏற்பீர்!" என எடுத்துத் தருகிறாள். பிறகு மதுரை சென்றதும், மன்னவன் வழங்கிய தீர்ப்பும், கொலையும் தொடர்கின்றன. நீதி கேட்கும் கண்ணகி, மதுரையை எரித்த கண்ணகி என, பிறகு கண்ணகியின் கற்பின் வடிவம் வீர உணர்வில் செயல்படுகிறது.

-கோப்பெருந்தேவி, கணவனே உலகமென்று வாழ்ந்ததாகக் கூறப்படும் செய்தியோடு, தொடர்ந்து கணவன் மடிந்ததும், கண்ணகியின் இரண்டு அடிகளையும் தொட்டு

வணங்கி, வீழ்ந்து இறந்த செய்தியும் கூறப்படுகிறது.

"...........................தென்னவன்
கோப்பெருந்தேவி
குலைந்தனள் நடுங்கிக்
கணவனை இழந்தோர்க்குக்
காட்டுவ தில்லென்று
இணையடி தொழுது
வீழ்ந்தனளே மடமொழி"

—"தாயை இழந்த மகளைப் பார்த்து," கண்ணே! கலங்காதே! இதோ! இவரும் உனக்குத் தாய் மாதிரிதான்!" என்று இன்னொருவரைக் காட்டமுடியும். தந்தையை இழப்பினும், அண்ணன் தம்பியரில் ஒருவரை இழப்பினும் இவ்வாறு காட்டமுடியும். ஆனால், கணவனை இழந்த மாதரிடம், "கண்ணே! கலங்காதே! இதோ! இவரும் உனக்குக் கணவர் மாதிரிதான்!" என்று காட்டமுடியுமா! ஆகவே, அந்த இடத்திற்குப் பிறிதொருவர் இலர் ஆகையால், "எற்றுக்கு நான் வாழ?" என மடிந்தனள் பாண்டியன் மாதேவி!

இவர்கள் இருவரும் குடும்பப் பெண்கள்; நற்குலத்தில் பிறந்தவர்கள். இவர்கள் கற்போடு வாழ்ந்தது இயற்கை. இதற்குத் தனி முக்கியத்துவம் கிடையாது. சிறப்பிக்கப்படும் செய்திகள் சில இவர்கள்பற்றிக் காணப்படுவதால், தனித்து நிறுத்தி இவர்கள் 'கற்பு' முத்திரையோடு பாராட்டப் பெறுகிருர்கள். அதற்கு முழுத் தகுதி உடையவர்கள்தான் இவர்கள் என்ருலும், மாதவியோடு ஒப்பிடுங்கால், இவர்கள் வெகுதூரம் பின்னுக்கிச் சென்றுவிடுகிருர்கள்.

சாம்எனில் சாதல் நோதல் ;
அன்னவன் தணந்த காலைப்
பூமனும் புனைதல் இன்றிப்
போற்புடன் புலம்ப வைகிக்
காமனை என்றும் சோல்லார்
கணவற்கை தோழுது வாழ்வார்
தேமலர்த் திருவோடு ஒப்பார்
சேர்ந்து அவன் சேல்லல்
தீர்ப்பார்.

(சீவகசிந்தாமணி)

மாதவி விலைமகள்—"பலரொடும் புணர்தலே விலைமாதர் கற்பு" என வழங்கப்பெறும் பகுதியினள். இவள் ஒரு நிலையில் வாழ்ந்ததுதான் உயர்வு! வசதி இருந்தும், யாரோடு போயினும் ஊர் தூற்ருது எனும் நிலையிருந்தும், கோவலனுடனேயே வாழ்ந்து, ஒரு பெண் மகவு பெற்று, கோவலன் கொலை உண்டதும், துறவு பூணுகிருள். அதோடு தன் மகளையும் துறவு பூணச் செய்கிருள். இந்திர விழாவுக்கு மாதவியும், அவள் மகள் மணிமேகலையும் வாராமை கண்டு வருந்திய சித்திராபதி - மாதவியின் தாய்-மாதவியின் தோழி வயந்தமாலையை அழைத்து, விழாவுக்கு மாதவி வாராமையால், நகர் என்னென்ன பேசுகிறது என்பதை மாதவிக்கு எடுத்துக் கூறும்படி கூறுகிருள். வயந்தமாலையும் அங்கே சென்று,

ஆடிய சாயல்
ஆயிழை மடந்தை
வாடிய மேனி
கண்டுளம் வருந்திப்
பொன்னேர் ரனையாய்
புகுந்தது கேளாய்
உன்னே டிவ்வூர்
உற்றதொன் றுண்டு கொல்
வேத்தியல் பொதுவியல்
என்றிரு திறத்துக்
கூத்தும் பாட்டுந்
தூக்குந் துணிவும்
பண்ணியாழ்க் கரணமும்
பாடைப் பாடலும்
தண்ணுமைக் கருவியுந்
தாழ்தீங் குழலும்
கந்துகக் கருத்தும்
மடைநூற் செய்தியும்
சுந்தரச் சுண்ணமுந்
தூநீ ராடலும்
பாயற் பள்ளியும்
பருவத் தொழுக்கமும்
காயக் கரணமுங்
கண்ணிய துணர்தலும்
கட்டுரை வகையுங்
கரந்துறை கணக்கும்
வட்டிகைச் செய்தியும்
மலராய்ந்து தொடுத்தலும்
கோலங் கோடலுங்
கோவையின் கோப்பும்
காலக் கணிதமுங்
கலைகளின் றுணிவும்
நாடக மகளிர்க்கு
நன்கனம் வகுத்த
ஓவியச் செந்நூல்
உரைநூற் கிடக்கையும்
கற்றுத் துறைபோகிய
பொற்றொடி நங்கை
நற்றவம் புரிந்தது
நாணுடைத் தென்றே
அலகின் மூதூர்
ஆன்றவ ரல்லது
பலர்தொகு புரைக்கும்
பண்பில் வாய்மொழி
நயம்பா டில்லை
நாணுடைத்(து).........

—என்கிருள்.

"அடி மாதவி, சகல கலைகளிலும் வல்லவளான நீ நாடகக் கணிகையர்க்கென நன்கு வகுக்கப்பட்ட யாவும் அறிந்த நீ துறவு பூண்டது நாணத் தக்கதாகும். பேசாமல் துறவை விடு. குலத் தொழிலை மேற்கொள். திருவிழாவுக்கு வா" என்று சொல்லாமற் சொல்லியழைக்கிருள். அப்போது தான் மாதவியின் மலையன்ன கற்பு வாய்மொழியாக உருவமெடுக்கிறது. அந்த வாய்மொழியில் தான் கண்ணகியின் கற்பும் கோப்பெருந்தேவியின் கற்பும் தோற்ருேடுகின்றன. தான் இந்திர விழாவிற்கு வரமுடியாதென்றும் தன் மகளும் வரமாட்டாளென்றும் கூறி, அதற்கான காரணங்களைக் கற்பு நெறியோடு விளக்குகிருள்.

"அடி வயந்தமாலை! கற்புள்ள மகளிர் தங்கள் கணவர் இறந்தால் கொல்லன் உலைக்களத்திலுள்ள துருத்தியின் மூக்கினைப்போல வெய்து உயிர்த்து துன்பம் மனதில் அடங்கப்பெருமல் உயிரை விடுவர். அல்லது தண்ணீரில் குளிப்பது போல் எண்ணிக்கொண்டு மகிழ்ச்சியோடு தீக்குளிப்பர். அதுவுமல்லது, என்றென்றும் தன் கணவரை எண்ணி விதவைக்கோலம் பூண்டு தங்கள் உடம்பைத் தாங்களே வருத்திக்கொள்வர். ஆனால் எங்கள் கண்ணகியோ கணவன் கொலை செய்யப்பட்டான் என்று கேள்விப்பட்டதும், விரித்த கூந்தலோடு கண்ணீர் வடித்து அந்தக் கண்ணீரில் நனைந்த இளங் கொங்கையைத் திண்ணிதிற் திருகி எடுத்துப் பாண்டியன் தலைநகரை எரியுண்ணச் செய்தாள். அவள் மகள் மணிமேகலை; என் மகளல்ல. அவள் இந்தத் தீய செயலுக்கு வரமாட்டாள். கணவன் இறந்த செய்தி கேட்டும் இன்னும் உயிரோடிருக்கிறேனே புகழிழந்த நான்—நானும் வரமாட்டேன். போ" என்கிருள் மாதவி. இங்கேதான் விலைமாதின் விலையாகாத கற்பு வெளியாகிறது.

காதல னுற்ற
கடுந்துயர் கேட்டுப்
போதல் செய்யா
உயிரொடு நின்றே
பொற்கொடி மூதூர்ப்
பொருளுரை யிழந்து
நற்ருெடி நங்காய்
நாணுத் துறந்தேன்
காதல ரிறப்பிற்
கனையெரி பொத்தி
ஊதுலைக் குருகின்
உயிர்த்தகத் தடங்காது
இன்னுயிர் ஈவர்,
ஈயா ராயின்
நன்னீர்ப் பொய்கையின்
நளியெரி புகுவர்
நளியெரி புகாஅ
ராயின் அன்பரோடு
உடனுறை வாழ்க்கைக்கு
நோற்றுடம் படுவர்
பத்தினிப் பெண்டிர்
பரப்புநீர் ஞாலத்து
அத்திறந் தாளும்
அல்லளெம் ஆயிழை
கணவற் குற்ற
கடுந்துயர் பொறுஅள்
மணமலி கூந்தல்
சிறுபுறம் புதைப்பக்
கண்ணீர் ஆடிய
கதிரிள வனமுலை
திண்ணிதிற் திருகி
தீயழற் பொத்திக்
காவலன் பேரூர்
கலையெரி யூட்டிய
மாபெரும் பத்தினி
மகள்மணி மேகலை
அருந்தவப் படுத்தல்
அல்ல தியாவதும்
திருந்தாச் செய்கை
தீத்தொழிற் படாஅள்

—என்ற அடிகள் மாதவியின் பண்பட்ட உள்ளத்தை எடுத்துக் காட்டுகின்றன.

மாதவி கோவலன் இறந்ததற்குப் பின் வேருெருவன் பால் சென்றிருப்பினும் காவியம் பழித்துக்கூற நியாயமில்லை. அல்லது அவன் இருக்கும்போதே தேடி வருவார்க்கு நித்தமும் படுக்கை விரித்திருப்பினும் குற்றமென்று கொள்ளாது காவியம். காரணம் அவள் பிறப்பிலேயே அதற்கு அனுமதிச்சீட்டு கிடைத்திருக்கிறது. வாய்ப்பு நிறைய; வசதிகள் பல; தடுப்பாரில்லை; பழிப்பார் தோன்ருர்; பெருமையே உண்டு; பொன் பொருள் குவியும். இவ்வள் விருந்தும் காதலனை எண்ணிக் கைம்மை நோன்பு ஏற்ருளே கணிகை மாதவி, அவள்தான் மூத்த கற்பினள். ஆம்; மூவர் கற்பிலும் மூத்த கற்பு மாதவியின் கற்பே.

மாதவி!—மாதர் குலத்திற்கோர் இலக்கணம். மாதவி! – கற்பின் தலைவி, மாதவி! – கண்ணகிக்கு மூத்தவள். மாதவி! – குலமாதர் பெருமைக்கு முடிசூடா ராணி. ★

டெலிபோன் செய்த கிளி!

டப்ளின் நகரில் கிட்டோ என்ற பெயருள்ள ஒருகிளியை ஜொனதன் பெய்லி குடும்பத்தினர் வளர்த்து வந்தனர். சென்றவாரம் இக்கிளி தன் கூண்டைவிட்டு வெளியே வந்துவிட்டது. கூண்டுக்கிளியாக வாழ்ந்தது பிடிக்கவில்லை போலிருக்கிறது. நான்கைந்து நாட்கள் சுதந்தரமாகப் பறந்து திரிந்தது. எங்கெங்கொ சுற்றியிருக்கிறது. பறந்து செல்லும் தன் இனத்தாரைப் பார்த்து மகிழ்ந்திருக்கிறது. சுதந்தரமாய்ச் சுற்றியது போதும் என்று நினைத்ததோ என்னவோ தெரியவில்லை, திடீரென்று அதற்கு வீட்டு நினைவு வந்துவிட்டது. தனது முதலாளி வீட்டுக்குப் பல மைல் தூரத்தில் உள்ள இன்னொரு வீட்டிற்குப் போய் 'கீட்டோ' என்ற பெயரையும் பெய்லி வீட்டின் டெலிபோன் எண்ணையும் சொல்லிச் சொல்லிக் கத்திக்கொண்டிருந்தது. அந்த வீட்டுக்காரர்களுக்கு விஷயம் விளங்கிவிட்டது. கிளி சொன்ன டெலிபோன் எண்ணுக்குப் போன் செய்தார்கள். உடனே பெய்லி குடும்பத்தார் அந்த வீட்டிற்கு வந்து கிளியை அழைத்துச் சென்றனர். எங்காவது காணமற் போய்விட்டால், தன் பெயரையும், வீட்டு டெலிபோன் எண்ணையும் சொல்லுமாறு பெய்லியின் மனைவி இந்தக் கிளிக்குப் பழக்கப்படுத்தி வைத்திருந்தாளாம். அதனுல் தான் கிளி பாதை தப்பியும் மீண்டும் சொந்த இடத்திற்கே வரமுடிந்தது. சொன்னதைச் சொல்லியது கிளிப்பில்லை; அதனுல் இழந்த சுகத்தைத் திரும்பப் பெற்றது.

> "போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றல்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் ! அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 2 | 17-4-56 | இதழ் 44

தென்னவன் தாய்நாடு சிங்காரமே !

பூரித்து நிற்கிறோம். புதுப்புது விளக்கங்கள் பெறப்போகிறோம் திருச்சியிலே, என்பதை நினைக்கும் தோறும் இலட்சிய உள்ளங்கள் துள்ளிக் குதிக்கின்றன. ஒருமானைப் பின்தொடர்ந்து ஓடிவரும் ஒரு கோடி மான்கள்போல, தமிழர் படை திருச்சி வரச் சல்லடம் கட்டி நிற்கிறது. அடுத்து நிற்கும் பொதுத் தேர்தல், எடுத்திருக்கும் புதுப் பணி, தொடுத்திருக்கும் மாற்றார் கணைகள்-இவைகள் பற்றி விளக்கம் பெறவும், தென்குமரி முனையிலிருந்து, பனிபடர்ந்த வடமலை வரையிலுமுள்ள கனம்களின் காலடியிலே சிக்குண்டு சீரழியும் தென்புலத்தின் வாழ்வைப் புதுப்பிக்க வழிகாணவும் திராவிடத்தின் மக்கள் சக்தி திருச்சியிலே பாடி வீடமைக்கிறது.

வெறிபிடித்தவல்லூறுகளுக்கும் விழியற்ற ஆந்தைகளுக்கும் தப்பி, தன்னிகரற்ற வண்ணப்பறவையாக அரசியல் வீதியிலே சிறகடித்து மிதந்துவரும் பால்நிறப் புறாக் கூட்டம் வேல்பெறவும், வைரிகளின் வில்லம்புகளைத் தாங்கிச் சாய்க்கும் கேடயம் பெறவும் தி. மு. கழகம் திருச்சித் திருநகரில் தன்னுடைய இரண்டாவது மாநில மாநாட்டைக் கூட்டுகிறது மே 17, 18, 19, 20 தேதிகளில் !

திருச்சி !-தேர்கொண்ட வசந்த வீதிகளில் சுற்றுலா வந்து பாராண்ட தமிழ் மன்னர்கள் வாழ்ந்த இடம். வளம்பெற்றுத் திகழ்ந்த பொன்னகரம். வாகை சூடி, வாழ்த்துப்பெற்று, வாசனைச் சந்தனம் பூசி, குமிழ்சிரிப்புப் பொங்கக் குஞ்சரத்து மீதமர்ந்து வந்தார்களே திராவிட வேந்தர்கள், அந்தத் திருச்சியிலேதான் தாயகத்துச் சேனை-தமிழகத்து மறவர் படை திட்டம் பெறப்போகிறது. இயக்கத்தின் மெய்க்காப்பாளர், - இன்மொழிப் பேராசிரியர், நாம் பெற்ற செல்வம்-நாவினிக்கும் பேச்சாளர், - ஆரியப் படை கடந்த அந்தநாள் வேங்கை மார்பனின் இந்த நாள் நினைவுருவம், நமது நெடுஞ்செழியப் பெருந்தகை, வாளுக்குக் கூரேற்றும் அந்த நான்கு நாள் வைபவத்திற்குத் தலைமை தாங்க இருக்கிறார். தென்னவர் பட்டாளம் பெருமை பெருகிறது. மகிழ்ச்சி! பெரு மகிழ்ச்சி !

மாவட்டங்கள் தோறும் மாநாடுகள் நடத்தி, மக்கள் மத்தியிலே கொள்கை விளக்கம் செய்து, வகுப்புநீதி, சமுதாய சீர்திருத்தம், பேச்சுரிமை, எழுத்துரிமை ஆகிய சிக்கல்களை அலசி,

கலைத்துறையில் மறுமலர்ச்சி காணவும்; கலையை வீழ்ந்து பட்ட மக்கள் எழுச்சிபெறச் செய்யும் சாதனமாக்கி, இலட்சியம் சொல்லும் இணையற்ற நாடகங்கள் நடத்தி,

அடக்குமுறைக்கு ஆளாகி, பொல்லாத இதயங்கொண்டோரின் பொருமைத் தீயில் வெந்து, ஆனல் சாகாமல், சந்தர்ப்பத்தைச் சதி வேலைக்குப் பயன்படுத்திக்கொள்ளும் 'அரசியல் போக்கிரி'களின் மாய வலையினின்று தப்பிக்க இன்னல் பல அனுபவித்து,

'டுமீல் ! டுமீல் !!'-என்று வானத்தைப் பார்த்தல்ல, வந்திருந்த மக்களுக்கிடையே குண்டு பாய்ச்சினர்களே சென்னை சர்க்கார், அல்லிக்கு வாய்த்த ஆண்மையற்ற அர்ச்சுனனைப்போல, டில்லிக்குக் கிடைத்த விவஸ்தை கெட்ட சென்னை சர்க்கார் - அவர்களின் வெறிப் பார்வைக்கும் தப்பி,

தனக்குள்ள பலத்தைத் தீய சக்திக்கு 'தானம்' செய்துவிடாமல்,

தனக்குள்ள செல்வாக்கை அரசியல் வாணிபத்திற்கு மூலதனமாக்கிவிடாமல் திரண்டுள்ள சக்தியைத் தென்னரசு காண, தாழ்வு போக்கி வாழ்வுபெற சுயமரியாதைச் செல்வங்கள் சந்திக்கப்போகிறார்கள் ! நாயக்கர் ஆட்சி, நவாப்புகள் தர்பார், கிளைவின் கெடுபிடி இத்தனைக்கும் அழியாமல் அழகு உமிழ்ந்துகொண்டிருக்கும் திருச்சி மாநகரிலே, நாம் கைகொடுத்து, கலந்து உறவாடி, அகந்திறந்து, வாதம்புரிந்து உருக்கி எடுக்கப் போகும் திட்டங்கள் எத்தகையவை! நம்மைக் காட்டிலும் நமது மாநில மாநாட்டை எதிர்நோக்கியிருக்கும் நமது அரசியல் எதிரிகளைப் பெருமூச்செறியச் செய்யும் சக்தி பெற்றவையாக இருக்கும்.

'ஆவடி' நடத்தி ஆர்ப்பரித்த கனக, விஜயர்களை அடக்கி, ஒடுக்கி ஆமைகளாக்கும் கூர்பெற்றதாக அமையும்.

கருப்புச் சட்டைக்காரர்-காவலுக்குக் கெட்டிக்காரர் - ஏவல்புரிந்து எழில் வாழ்வு நடத்தியோரின் நினைவுச்சின்னம் - கொங்குநாட்டுக் கொத்துமீசைப் பெருங்கிழவர் ஜி பி. சோமசுந்தரம் அவர்கள், எதேச்சாதிகாரச் சிங்காதனங்களைக் கிடுகிடுக்க வைக்கும் நமது மாநாட்டைத் திறந்துவைக்கப் போகிறார்.

ஒப்பற்ற தலைவர் உலகப் பேரறிஞர், 'எல்லைக்கோட்டை அழித்தெழுத எழுதுகோல் போதும்' என்று இளம்பிய கொள்கைக் குன்றம், பல்கலை வல்லவர் அண்ணா அவர்கள் புதியதோர் பாதை காட்டப்போகிறார். நாடும் எதிர்பார்த்திருக்கிறது.

இன்னும் இருப்பது முப்பது நாட்கள். திருச்சி இப்போதே புதுக் கோலம் பூணத் தொடங்கிவிட்டது. திக்கெட்டும் படர்ந்து கிடக்கும் தி. மு. கழகக் கிளைக்கழகங்களின் கனவிலும் நினைவிலும் திருச்சி தோன்றித் தோன்றி மறைகிறது. 'திட்டம் ! அடுத்த செயல் !' எனக் காளையர்கள் துடித்து நிற்கின்றனர். அவர்களின் மனக்கண் முன்னே திருச்சி நிழலாடுகிறது. அயராது உழைக்கும் அம்பிலும், அரும் பணியாளர் முத்துவும், ஆற்றல் மிகு நண்பர் மணியும் ஓடியாடிப் பணிபுரிவது நிழற்படம்போல் தெரிகிறது. இன்னும் முப்பது நாட்கள் ! பொறுப்பது எப்படியோ என்று தான் தோன்றுகிறது. மாநாடு என்றல்-அதுவும் மாநில மாநாடு என்றல் - தென்னாட்டின் பலம் பெற்ற எதிர்க்கட்சிக்காரர்கள் நடத்துவதென்றல் முன்னேற்பாடு சாதாரணமாக இருக்கமுடியுமா ?

போவோம் ! நாளை எண்ணிக் கொண்டே வாருங்கள் ! அடுத்த 17, 18, 19, 20 தேதிகளில் - இந்த நேரத்தில் யாருடைய கருத்து விருந்தில் திளைத்திருக்கிறோமோ தெரியவில்லை. தென்னவன் தாய் நாடு சிங்காரமே என்பதை அன்று வது மாற்றார் கண்டு மாசடைந்த அவர்களின் இதயங்களைக் கழுவிக் கொள்ளட்டும்.

அரசியல்

★ ஏப்ரல் 4. அடுத்த பொதுத் தேர்தல் ஒத்திவைக்கப்படமாட்டாதென நேரு அலகாபாத் நகரில் கூறினர்.

★ ஏப்ரல் 5. சி. ராசகோபாலாச்சாரியார் சென்னை சட்டசபைக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் பதவியை இராஜினமாச் செய்துவிட்டார்.

★ இலங்கையில் ஆளும் கட்சியான கொத்தலாவலையின் கட்சி, நடைபெற்று வரும் பொதுத் தேர்தலில் பெருமளவுக்குத் தோல்வியடைந்தது.

★ ஏப்ரல் 6. இஸ்ரேல்-எகிப்து எல்லையில் காஜா பகுதியில் எகிப்தியப் பாசறைகள் மீது இஸ்ரேலியப் படைகள் மீண்டும் துப்பாக்கிப் பிரயோகம் துவக்கியதாகவும், இஸ்ரேலியர்கள் பீரங்கிப் போரைத் தொடர்ந்து நடத்திக் கொண்டுள்ளதாகவும் தெரிகிறது.

★ காஷ்மீர் பிரச்சனை பற்றி பாகிஸ்தான் பார்லிமெண்டின் விசேடக் கூட்டத்தில் பாக். முதல்வர் முகம்மது அலி, காஷ்மீர் முன்னுள் அமைச்சர் ஷேக் அப்துல்லாவையும் மற்ற அரசியல் ஊழியர்களையும் விடுதலை செய்யுமாறு கோரியுள்ளார். இப்படிச் செய்தால் இந்தியா-பாகிஸ்தானின் நல்லுறவு வளருமென்றும் சொல்லியிருக்கிறர்.

★ ஏப்ரல் 8. டில்லியில் வெளிநாட்டு மொழிப் பள்ளித் தொடக்க விழாவில் மக்கள் சபை அவைத் தலைவர் ஆங்கிலத்துடன் வேறொரு வெளிநாட்டு மொழியையும் கற்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

★ நேபாளத்தில் கடந்த நான்கு ஆண்டுகளாக பொது உடைமைக் கட்சிக்கு இருந்து வந்த தடையை அரசாங்கம் தற்போது நீக்கப்போவதாகத் தெரிகிறது.

★ மொழிவழியில் மாகாணங்கள் அமைக்கப்பட்ட பிறகு சென்னை மாகாணத்தின் பெயரைத் 'தமிழ் நாடு' என்று மாற்றியமைக்குமாறு மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தும் தீர்மானம் சென்னையில் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

★ இந்தியா மூன்றாவது உலக முகாம் ஏற்படுத்த முயலுகிறதென்று பாக் வெளிநாட்டு அமைச்சர் சௌதிரி டாக்காவில் தெரிவித்துள்ளார்.

★ ஏப்ரல் 9. வடநாட்டில் தனிப் பட்டவர்களின் நிருவாகத்திலுள்ள பித்தளை, வைரச் சுரங்கத் தொழில்களை ஏற்றுக்கொள்ள இந்திய அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

வெண்பாப் போட்டி 28

ஈற்றடி : பால்நிலவே நீயே பகர்.

முடிவு தேதி 1-5-56

முகவரி:— வெண்பாப் போட்டி,
தென்றல்,
சென்னை-6

மாவீரன் நெப்போலியனைச் சிறை வைத்ததாலேயே, வரலாற்றில் இடம் பெற்றுவிட்டிருக்கிறது எல்பா—ஒரு சிறு தீவு! நான்கு மாபெரும் சக்திகள் என்று கருதப்படும் ரஷ்யா, பிரஷ்யா, ஆஸ்டிரியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளின் கூட்டுச்சக்தியால், தோல்வியுற்ற நெப்போலியனை எல்பாவில் சிறை வைத்த காட்சி, மனிதசமுதாயத்தின் உரிமையையும் சுதந்தரத்தையும் மதிக்காது, பெற்ற அதிகாரத்தால், தான் எதையும் செய்துவிட முடியுமென எண்ணுபவர்களுக்குப் பாடமாக அமைந்து விட்டிருக்கிறது. இங்கு, நெப்போலியன் எல்பாவிற்குச் செல்ல இருந்த சில நாட்களுக்கு முன்னர் நடந்த சம்பவங்களை, சோசப், அபட் அவர்கள் எழுதிய, "நெப்போலியன் போனபார்ட்டியின் வாழ்க்கை" எனும் வரலாற்று நூலிலிருந்து இங்கே மொழிபெயர்த்துத் தரப்படுகிறது. பயனுள்ள கட்டுரை. [ஆ-ர்.]

அவனி கலக்கிய பவனி

வெற்றிக்குமேல் வெற்றியை அணைத்துக்கொண்டு சென்ற வீரன், ஐரோப்பாவில் உள்ள அரசுகள் அச்சத்தால் அமைதியிழந்து தவித்திருக்க, களம் பல அமைத்து, படை பல கொண்டு ஐரோப்பாவின் மூலை முடுக்குகளிலெல்லாம் 'நெப்போலியன், 'நெப்போலியன்' என்ற பெயரே ஒலித்த வண்ணம் இருக்கச் செய்த பிரெஞ்சு நாட்டின் தீரன் நெப்போலியன் தோல்வியடைந்துவிட்டான். அரசுபீடத்திலிருந்து அவனை நீக்கி, எல்பாத் தீவில் சிறைவைக்கும் ஏற்பாட்டைச் செய்துகொண்டிருந்தன அவனைத் தோற்கச் செய்த நாடுகளாம், ரஷ்யா, பிரஷ்யா, ஆஸ்டிரியா, இங்கிலாந்து முதலியன. எல்லா ஏற்பாடுகளும் முடிந்தன. இனி நெப்போலியனது கையெழுத்துத்தான் தேவை. அதைப் பெற்றுவரும் வேலையில் **காலியன் கோர்ட்** நெப்போலியனது நெருங்கிய நண்பனை அனுப்பினர்.

வேதனை தரும் பணியில், தான் அமர்த்தப்பட்டதற்கு, கோர்ட் மிக வருந்தினன் - பயப்படவும் செய்தான். ஒப்பந்தத்தில் கையொப்பம் இட மறுத்து விட்டால், நிலைமை எவ்வளவு மோசமாகிவிடும் என்று எண்ணியவாறு, வேதனைக் குரலோடு நெப்போலியனை நோக்கி, "தங்களின் கீர்த்தியின் பேரால், பணிவுடன் வேண்டுகிறேன் இது பற்றி ஒரு முடிவுக்கு வாருங்கள். தாங்கள் எந்த நிலையிலே வைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை எண்ணிப் பாருங்கள்" எனக் கூறுகிறன்.

இதைக் கேட்ட நெப்போலியன் வேதனையோடு, தன் இரு கண்களையும் உயர்த்தி கோர்ட்டைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்தான். பிறகு இருக்கையிலிருந்து எழுந்து கரங்களைப் பின்புறமாகக் கட்டிக்கொண்டு தரையைச் சிறிதுநேரம் உற்று நோக்கி, "இதில் ஒரு முடிவுக்குக் கண்டிப்பாக வரத்தான் வேண்டும். அதை நான் உணர்கிறேன். நாளை நான் ஒரு முடிவு எடுக்கிறேன்" என்று கூறினன்.

இரவு வந்துவிட்டது. கோர்ட், கொதித்துக் கொண்டிருந்த அரசனின் கரங்களை எடுத்து அணைத்துவிட்டு, அவ்விடத்தை விட்டு நீங்குகிறன். ஆனல் அன்றிரவே நெப்போலியனுக்கு ஏற்பட்ட கடுமையான வயிற்றுவலியின் காரணமாக அழைக்கப்படுகிறன், கோர்ட்! **டிரெஸ்டன்** சண்டைக்குப் பிறகு நெப்போலியனைக் கடுமையான **"கோலிக்"** என்ற வயிற்றுவலி பற்றிக்கொண்டது. அரசும் முடியும் இழக்க நேரிட்டுவிட்டதே என்ற கவலையும், தூக்கமின்மையும், அவனது வயிற்றுவலியைப் புதுப்பித்துவிட்டன.

வேதனை தாங்காது, படுக்கையிலே உருண்டுகொண்டிருந்தான் நெப்போலியன். தாளமுடியாத வேதனையை அவன் அனுபவித்துக்கொண்டிருக்கிறன் என்பதை அவனது நெளிந்துகொண்டிருக்கும் புருவங்கள் எடுத்துக் காட்டிக்கொண்டிருந்தன. கண்கள், ஒளியிழந்து குழிவிழுந்து மங்கிக்கிடந்தன. வேதனையின் உச்சநிலையிலே அவன் இருக்கிறன் என்பதை அவனது ஒவ்வொரு அசைவும் உணர்த்திக்கொண்டு இருந்தது. துன்பம் தாங்காது "தான்" எங்கே சப்தம் போட்டுவிடுவோமோ என்ற பயத்தால் கைக்குட்டையை வாயில் அடைத்துக் கொண்டு, படுக்கையில் புரண்டுகொண்டிருந்தான். தான் இறந்து கொண்டேயிருப்பதாக எண்ணினன். கோர்ட் இருந்த பக்கம் திரும்பி, "நான் இறந்துகொண்டிருக்கிறேன். இனி என்னல் என் வாழ்வை அதிக காலம் இழுக்க முடியாது" என்று கூறியது அவன் அடைந்த வேதனையின் பிரதிபலிப்பாகும்!

சூடான 'டீ'யையே மருந்தாகக் கொடுக்கிறன் நெப்போலியனது வைத்தியன் 'ஐவான்' என்பான். அரசனும் வயிற்றுவலியின் பிடியிலிருந்து விடுபடுகிறன்.

வயிற்றுவலிக்கு ஆளான நெப்போலியன் இது சமயம், தற்கொலை செய்துகொள்வதற்கு முயன்றன் என்று சிலர் கூறுகிறர்கள். அப்படிக் கூறுவதற்கு எத்தகைய ஆதாரங்களும் கிடையாது! நெப்போலியனுக்கு ஏற்பட்ட அப்பயங்கரமான நோய், அவனைத் தற்கொலை செய்துகொள்வதற்கு எண்ணச் செய்திருக்கும் என்பதில் நாம் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. எந்த மனிதனும் அது போன்ற 'நிலையில்' வாழவேண்டும் என்று விரும்ப மாட்டான். தன்னைத்தானே அழித்துக்கொள்வதை, எப்பொழுதும் கண்டிக்கும் இயல்புடையவன் நெப்போலியன். கோழைகளின் செயலே தற்கொலை எனக் கருதுபவன். "காதல் கைகூடாத காரணங்களால் தற்கொலை நடந்துவிடுகிறது. அது மிகத் தவறு! சேர்த்து வைத்த செல்வத்தை இழக்க நேரிடும்பொழுது, அது தாங்காது சிலர் தற்கொலை செய்துகொள்ளுகின்றனர். எவ்வளவு கோழைத்தனம்தான் இதில் அடங்கியிருக்கிறது! தாங்கமுடியாத அவமானம் நேரிட்டுவிட்டால் சிலர், தற்கொலை செய்துகொள்ளுகின்றனர். இதில்தான் எவ்வளவு பலவீனம் காணப்படுகிறது? ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஏற்பாகியிருந்தும், சாவு பற்றி எண்ணவில்லையென்றல் அதில்தான் உண்மையான உறுதியும், மற்றவர்கள் கண்டு வியக்கும் வீரமும் இருக்கிறது." என்று நெப்போலியன் ஒருமுறை தன் நண்பர்களிடம் கூறினனும்.

இரவு முழுதும் அமைதியான தூக்கத்தில் இருந்தான். தூக்கம் அவனது வேதனையைக் குறைத்தது. காலை மலர்ந்தது. கதிரவன் தன்னுடைய பிரகாசமான ஒளிக்கற்றையை உலகெல்லாம் பரப்பி ஒளி செய்தான். நெப்போலியனும் விழித்தான். இரவு எனும் துயரத்திலிருந்து விடுதலை பெற்ற பறவைக் கூட்டங்கள் தங்களுக்கென அமைந்த இசையை, காற்றிலே பரப்பிய வண்ணம் சிறகடித்துப் பறந்துகொண்டிருந்ததை, அமைதியாக நின்று, பார்த்துக்கொண்டிருந்தான். அங்கிருந்த கோர்ட்டிடம், "நான் வாழவேண்டும், சாகக்கூடாது என்று கடவுள் கட்டளையிட்டிருக்கிறர்" எனக் கூறியபடி அங்குமிங்கும் நடக்கலானன்.

ஐந்து மணி அடித்துவிட்டது. மேகக் கூட்டங்கள் இல்லாத வான வெளியிலே, கதிரவனின் மஞ்சள் வெயில் பரவ நின்றது. அந்த ஒளி நெப்போலியனது அறை வாயில்களில் கட்டப்பட்ட திரைகளின் வழி நுழைந்து, அழகு செய்தபடியிருந்தது. நெப்போலியன் தன் கரத்தால் நெற்றியை அழுத்திப் பிடித்துக்கொண்டிருந்தான். சிறிது நேரம் சென்ற பின்னர் கோர்ட்டை நோக்கி, "இன்று நான் ஒப்பந்தத்தில் கையெழுத்திட முடிவு செய்துவிட்டேன், நீ செல்லலாம்" என்று சொல்லியதையைக் கேட்ட கோர்ட்டின் நெஞ்சம், துக்க வெள்ளத்துள் அமிழ்ந்தது.

அவை கூடி, நெப்போலியனல் பார்வையிடப்பட்டு, கையெழுத்திட்ட ஒப்பந்த ஏட்டைப் பரிசீலிக்க ஆரம்பித்தனர். முக்கியமான அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ள முன்வரவில்லை. நாட்டு மக்களோ, போரின் கொடுமையில் சிக்கித் தவித்தமையால், நிரந்தர அமைதியை நாடினர். 1814-ம் ஆண்டு ஏப்ரல் 16-ம் தேதி காலை, காலியன் கோர்ட், பான்டெய்ன் பெலு நெப்போலியன் தங்கியிருந்த மாளிகைக்குத் திரும்பிவர இருக்கிறன்.

அந்த மாளிகை, சோகத்தால் தாக்குண்ட காவலர்கள் சூழ்ந்து, துயரத்தின் பிடியிலே சிக்குண்டு கிடந்தாற்போல் இருந்தது. இடர்ப்பட்ட உள்ளத்தோடு கிடந்த நெப்போலியனைச் சூழ்ந்து நின்ற வீரர்கள், நெப்போலியன் ஆற்றிய வீரத்தைக் கண்டவர்கள்-போற்றிப் புகழ்ந்தவர்கள், அவனுக்காக உயிரையும் தரத்தயங்காதவர்கள். இவர்களுக்கிடையே பதவிக்காக, நன்றி கொன்ற தருக்கர்கள் இருக்கத்தான் செய்தார்கள். பெர்தியர் என்பான், துரோகிகள் கூட்டத்திற்குச் சிறந்த தலைவனக விளங்கினன். குப்பைமேட்டிலே கிடந்த அவனுக்கு, நெப்போலியன் பரிவு காட்டி, பதவி தந்து, உயர்நிலையை அடையச் செய்தான். பெர்தியர், நெப்போலியனது அந்தரங்க நண்பன்—என்று சொல்லி, பிறர் அச்சம் கொள்ளும் அளவுக்கு உயர்த்தப்பட்டான். ஆனல் இப்பொழுது — நெப்போலியன் தோல்வியுற்று எல்பா செல்லவிருக்கும் வேளையில் உடனிருந்து, அன்பு மொழி கூறித் தேற்ருது, நெப்போலியனது எதிரிகள் தந்த பதவிக்கு ஆசைப்பட்டு, தன்னை மனிதனுக்கியவனை மறந்து, எதிரிகளோடு சேர்ந்துவிட்டான். இச்செய்தியை அறிந்த நெப்போலியனுக்கு, புண்ணிலே இட்ட எரிகோல்போல் இருந்தது! பெர்தியர், பதவி ஆசைக்காகப் பணிந்துவிட்டானே என்று எண்ணும்பொழுதெல்லாம் நெப்போலியனது இதயம் வேதனை தாளாது துடித்தது.



மாளிகையிடையே இருந்த மலர்த்தோட்டத்திடையே கரங்களைப் பின்னல் கட்டிக்கொண்டு சோர்வுடன் நடந்துகொண்டிருந்தான் நெப்போலியன். எதிரில் கோர்ட் வருவதைக் கண்டபொழுது அவனது முகத்திலே, நம்பிக்கையொளி பிறந்தது. கோர்ட்டை நெருங்கி அவனது கரங்களைப் பற்றிக்கொண்டு,

"என்னுடைய புறப்பாட்டிற்கு எல்லாம்தயாராகிவிட்டதல்லவா?" என்று கேட்க, "எல்லாம் தயாராகிவிட்டது அரசே" என்று கோர்ட் பதில் கூறுகிறன். "நன்று" என்று கூறிய நெப்போலியனது குரலிலே இப்பொழுது ஓர் மாற்றம் காணப்பட்டது. கம்மிய குரலில், கோர்ட்டை நோக்கி, "உன்னல் நம்பமுடிகிறதா, கோர்ட், பெர்தியர், பிரியப்போகும் என்னிடம் ஒரு வார்த்தையும் சொல்லாது பிரிந்து போய்விட்டான் என்பதை? பெர்தியர் அங்கு, நம் எதிரிகளிடம் பதவிப் பிச்சைக்காக அலைந்த காட்சியைப் பார்த்திருக்கக் கூடுமே, நீ! என்னல் உயர்த்தப்பட்டவர்கள் இழிவு படிந்த பதவி பெற, தங்களை இழிந்தவர்களாக ஆக்கிக்கொண்ட காட்சியைப் பார்த்தால், அக்காட்சி ஒன்றே என்னைக் கொன்றுவிடும். பதவிப்பித்தர்களைத்தான் நெப்போலியன், ஆட்சியின் அணிகலனகக் கொண்டிருந்தான் என்று எதிரிகள் எண்ணிவிடலாமே! ஐயோ, நினைத்தால் நெஞ்சு வெடித்து விடும்போல் இருக்கிறதே! கோர்ட்! துரிதப்படுத்து-என் புறப்பாட்டை மிகவும் தாமதம் செய்துவிட்டாய் - மனிதர்களே இல்லாத இடம்தான் எனக்கு மனச்சாந்தியைத் தரமுடிமுயும்" என்று வெம்பிய உள்ளத்தோடு கூறுகிறன்.

பெர்தியர் போன்ற நன்றிகெட்டவர்கள் இருந்த இடத்திலே, பண்பும் அன்பும் கொண்டவர் இருந்தனர் என்பதை, நெப்போலியனல் அப்பொழுதே உணர்ந்துகொள்ள முடிந்தது!

வெந்த உள்ளத்தோடு, தோட்டத்திலிருந்து வந்துகொண்டிருந்த நெப்போலியனை, ஓர் காவலன் விரைந்து வந்து, வழிமறித்து நிற்கிறன். அடுத்த கணம் அரசனை நோக்கி, "மாட்சிமை தங்கிய அரசே!" - அவனது குரலிலே ஒரே நடுக்கம் -"என்னல் தாங்கிக்கொள்ள முடியாத மாபெரும் அநீதியை எனக்குத் தந்திருக்கிறர்கள். நீங்கள் அம் மாபெரும் அநீதியை அழித்து நீதி வழங்க

— 10-ம் பக்கம் —

நீங்களும் நாங்களும்

பத்திரிகைத் தொழிலின் நிலை பற்றி, ஏற்கனவே இரண்டாம் ஆண்டுத் துவக்கத்தில் - ஒரு முறை எழுதியிருக்கிறேன். இரண்டாம் முறையாக இப்போது எழுதுகிறேன்.

தமிழரசுக் கழக நண்பர் அண்ணாமலை, ஒரு அழகான கதை சொன்னார். ஒருவனிடம் ஏராளமான பணம்இருந்ததாம். அதை எப்படிச் செலவு செய்வது என்று தெரியாமல் திகைத்தானாம். உடனே குதிரைப் பந்தய சூதாட்டத்தில் இறங்கினானாம். அதிலே பணம் போவதற்குப் பதிலாக மேலும் குவிந்ததாம். பருத்திச் சூதாட்டம் ஆடினானாம்; அதிலேயும் மேலும் பணம் குவிந்ததாம். இப்படி எந்தத் தொழில் செய்தாலும், பணம் போகாமல் வரவாகவே வந்துகொண்டிருந்ததாம். கடைசியில் அவன் நன்கு யோசனை செய்து ஒரு வாரப் பத்திரிகை ஆரம்பித்தானாம். நாளாக ஆக, ஏஜண்டுகள் பணத்தை விழுங்க விழுங்க அவன் 'போண்டி'யானானாம்!

இந்தக் கதை மிகவும் அனுபவப்பட்டதன் விளைவாக அவருக்கெழுந்த கற்பனை. இதுதான் உண்மையும் கூட என்பது ஏஜண்டுத் தோழர்கள் நடந்து கொள்ளும் முறையிலிருந்து தெரிய வருகிறது. 'தென்றல்' வரவு கருதி நடத்தப்படும் பத்திரிகையல்ல என்பதற்காகவே. ஆரம்பத்திலிருந்தே - எல்லாப் பத்திரிகைகளும் எட்டுப் பக்கங்கள் போட்ட போதே - பன்னிரண்டு பக்கங்களாக வெளியிட ஆரம்பித்தேன். வரவுக்கும் செலவுக்கும் சரியாக இருந்தால் போதும்; பத்திரிகை நன்கு நடந்தால் போதும் என்பதே எனது லட்சியமாக இருந்தது. அந்த நேரத்தில், மற்றவர்கள் என்னை எதிர்த்த போதிலும் பன்னிரண்டு பக்கக் கொள்கையை விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டேன். ஏ ஜ ண் டு த் தோழர்கள் பலரும் நன்கு ஒத்துழைத்தார்கள். இடையில் சில பொறுப்பற்ற நண்பர்கள் தென்றலுக்கு வாய்த்ததன் விளைவாக பெரிய இழப்பை அனுபவித்தது "தென்றல்". இருந்தும், நான் மனந்தளராது, மேலும் தென்றலைச் சிறப்புறக் கொணரும் பணியில் ஈடுபட்டேன். நிர்வாகம் ஒழுங்குபட்டுத் திருப்தி தரும் வகையில் நடக்கும் இப்போது, ஏஜண்டுத் தோழர்களின் 'திருப்பணி' தொடர்ந்திருக்கிறது.

சில நகரங்களின் ஏஜண்டுகள், பத்திரிகை விற்றுவரும் அத்தனை பணமும் தங்களைச் சேர்ந்ததே எனக் கருதியே ஏஜன்ஸி எடுக்கிறார்கள்! அவர்களுக்கு உள்ள கழிவு என்று நாம் நிர்ணயிக்கும் தொகையில் அவர்களுக்குத் திருப்தி இல்லை போலும்; இதனால் சிலரிடத்துப் பெருந்தொகை தங்கிவிட்டது. இப்போது. கோர்ட் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது

மே மாத இரண்டாவது வார இதழில் அத்தகைய ஏஜண்டுகளின் பெயர்களை வெளியிட விருக்கிறேன்.

பழைய பத்திரிகை நண்பர்களும் புதிய பத்திரிகைகள் தொடங்குபவர்களும் அதனைப் பார்த்து, அந்த ஏஜண்டுகள் விஷயத்தில் எச்சரிக்கையாக இருந்து கொள்வார்களாக! நிற்க.

மே முதல் வாரத்தில் ஆரம்பிப்பதாக இருந்த 'மனம் போல வாழ்வு' என்னும் தொடர் கதையையும் ஜூன் முதல் வாரத்திற்கு ஒத்தி வைத்திருக்கிறேன். அதற்கிடையில் நடவடிக்கை எடுக்க வேண்டிய ஏஜண்டுகளின்மீது நடவடிக்கை எடுத்தும், அவ்விடங்களுக்குப் புதிய ஏஜண்டுகளை நியமித்தும், ஆவன செய்ய வேண்டியிருக்கிறது. ஜூன் முதல் 'தென்றல்' மேலும் சிறப்பாகப் பவனி வர, முயற்சி நடக்கிறது. ஜூன் தென்றலுக்கு ஒரு திருப்புக் கட்டம் என்னும் வகையில் நான் அக்கரை எடுத்துக் கொள்கிறேன். ஆகவே, ஏஜண்டுகளை நன்கு 'புடைத்து', உமி பறக்க, மணிதங்க, புது மணி சேர, தென்றலை நன்கு வளர்க்க ஆசைப்படுகிறேன்.

"நீங்கள் ஏன் அதிகம் எழுதுவதில்லை?" என்று நண்பர்கள் கேட்கிறார்கள். நிர்வாகத்திலும் நேரடி கவனம் செலுத்தி, மாதம் பத்துக் கூட்டங்களுக்குக் குறையாமல் வெளியூர் சென்று, இடையில் படத் தொழிலிலும் ஈடுபட்டு அலையும் நிலையில், எழுதுவதற்கான நிம்மதியே எனக்கு ஏற்படுவதில்லை. எவ்வளவோ எழுத ஆசை! அவற்றில் சிலவற்றை எழுதுவதாக அறிவித்து ஓய்வின்மையால் எழுதாமலே விட்டிருக்கிறேன். இனி எழுதுவேன்.

நண்பர்களில், உண்மையிலேயே தென்றலிடத்து அன்பு செலுத்துபவர்கள், ஏ ஜ ண் டு களை நம்புவதைக் காட்டிலும் நேரடியாக உறுப்பினராகிவிட்டால், வசதியாக இருக்கும். உறுப்பினர்கள் தொடர்பு நல்ல முறையில் கவனிக்கப்படும்.

—கண்ணதாசன்.

தென்றல் திரை உரிமையாளரின் புதிய முகவரி:

P. P. பத்மநாபன்,
2-27, அஜீஸ் முல்க்
3-வது தெருவு,
சென்னை-6.

★——★

ஏஜண்டுத் தோழர்களுக்கு!

தென்றல் திரை சம்பந்தப்பட்ட மணியார்டர்கள், போஸ்டல் ஆர்டர்கள், ரிஜிஸ்டர்கள், கடிதங்கள் மற்றைய யாவும் நிர்வாகி, தென்றல் திரை, சென்னை 6 என்ற முகவரிக்கே அனுப்ப வேண்டுகிறோம்.

★——★

தென்றல் திரையில் அறிஞர் அண்ணாவின் தொடர்கட்டுரை விரைவில் வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நிர்வாகி,
தென்றல் திரை.

இலக்கியத்தில் இல்லையாமே!

"பாரதம் ஒரே தேசம். அதைப் பிரிக்க வேண்டும் என்று பேசுகிறவர்கள் - துண்டாட விரும்புகிறவர்கள் துரோகிகள்; குள்ள மதியினர்-குறுகிய நோக்கினர்" என்றெல்லாம் 'வேதாந்தம் பேசிய' பாரத புத்திரர்கள், 'பாகிஸ்தான்' போக, 'பாக்கிஸ்தானத்தை' — எஞ்சிய இடத்தைப் பெற்றனர். எனினும், பிரிந்த பாகிஸ்தான் கூறுத - உரிமை பெற்ற பர்மா கூறுத - சிங்களம் கூறுத 'அகில'த்தைச் சேர்த்து 'அகில இந்தியா'வாக்கித் தமிழகத்தின்மீது மாற்றாந்தாய் மனப்பான்மை காட்டித் தம்மால் இழைக்க முடிந்த கொடுமைகளையெல்லாம் இழைத்து வருகின்றனர், 'இந்திய அரசாங்கம்' என்று கூறிக்கொள்ளுகின்ற வடக்கத்திய - டில்லி அரசாங்கத்தினர்.

தமிழகத்திற்கும் — தமிழுக்கும் - தமிழருக்கும் கொடுமை செய்வதையே தங்கள் தொழிலாகக் கொண்டுவிட்ட 'அவர்கள்', அண்மையில் தமிழன்னையின் அங்கங்களை அறுத்து, அயலவர்க்கு வழங்கி அங்கவீனப்படுத்தி அவமானம் செய்யும் திருப்பணியிலும் தீவிரமாக ஈடுபட்டு அதிலே வெற்றியும் கண்டு விம்மிப் புளகாங்கித மடைந்துள்ளனர். ஆம். சித்தூர்த் தமிழ்ப் பகுதிகள், திருவாங்கூர்த் தமிழ்ப் பகுதிகள் இப்படியாகப் பறித்துக் கொடுத்துக் கொண்டே இருக்கின்றனர். நமக்கு அமைச்சர்களாக வாய்த்திருக்கும் நல்லவர்களோ தாயின் மானத்தைப் பற்றிக் கவலைப் படாமல், டில்லி அரசியலார் கேட்டதையெல்லாம் கொடுத்து அவர்கள் காலில் கும்பிட்டு விழுகின்றனர். இது தகுமா? முறையா? மானமுள்ள செயல்தானா என்று கேட்கும் நம்மவரைப் பார்த்து ஏசுவதும், எளனம் செய்வதுமாக இருக்கின்றனர்.

ஐயகோ! டில்லி அரசியலார் தமிழன்னையின் அங்கங்களை மட்டுமே பழுது படுத்துகின்றனர். நமக்கு அமைச்சர்களாக வாய்த்திருப்பவர்களோ, தமிழன்னையின் சேலையையும் களைந்து எறிந்து, களிப்படையமுனைந்துவிட்டனர். தமிழகத்திற்குச் சொந்தமான பகுதிகளைத் துண்டாடி அயலவர்கட்குக் கொடுத்தனர் அவர்கள் - டில்லி அரசினர். அடிமைப் புத்தி தலைக்கேறியுள்ள நமது அமைச்சர்களோ, 'தமிழ்நாடு'-என்று ஏன் மாற்ற வேண்டும். 'மதராஸ்' என்ற பெயர் இருந்தாலென்ன? என்று கேட்கிறார்கள்.

'எல்லைத் தகராறுகள் தீர்ந்துவிட்டதாகக் கொள்ளமாட்டோம்' —என்கின்றனர் ஆந்திரர்கள். 'எல்லைக் கோரிக்கை - அது தீர்ந்து விட்ட பிரச்னை' என்று பேசுகின்றனர் நமது அமைச்சர்கள்.

"ஆந்திரா — தெலிங்கானா" என்று புதிய மாநிலத்தின் பெயர் இருக்கும்" என்று டில்லி மசோதா குறிப்பிடுகிறது. ஆந்திர நாட்டின் முதலமைச்சரோ, தாயகப் பற்றும், மானமும் உடையவராதலால், "அந்தப் பெயரை நாங்கள் ஒப்பமாட்டோம். 'ஆந்திரப் பிரதேசம்' என்றே மாற்றியமைக்க வேண்டும்" என்று திருத்தத் தீர்மானம் கொண்டு வந்து, ஏகமனதாகத் தீர்மானத்தை நிறைவேற்றியும் விட்டார்.

ஆனால், பெயர்ப் பிரச்னைபற்றி எதுவுமே அடிபடாத போதும், 'தமிழகம்' என்பது வேண்டாம், மதராஸ் என்ற பெயரை ஏன் மாற்ற வேண்டும்? 'தமிழகம்' என்பது இலக்கியத்தில் இல்லையே, என்று உளறிக் கொட்டி 'தமிழ்நாடு' என்று திருத்தும் பிரச்னையை அலட்சியப்படுத்தித் தள்ளிவிட்டனர் நமது அமைச்சர்கள்.

'தமிழகம்' என்ற பெயர் இலக்கியத்தில் இல்லை-சொல்லப்படவில்லை, என்று பேசியிருக்கிறார் நம் நிதியமைச்சர். ஆம், அவர் பார்த்த இலக்கியத்தில் இருந்திருக்காது - அவரும் தமிழ் இலக்கியத்தைப் பார்த்திருக்கமாட்டார்.

'வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகம்'

★

'வையகம் வரைப்பிற் றமிழகம்
தண்டமிழ் வரைப்பகம்'

என்றெல்லாம் பலபடக் கூறுகின்ற மனிதனை மனிதனாக வாழவைக்கும் இயற்கை இயல்புடைய நமது சங்க இலக்கியங்களைப் படித்துப் புரிந்து கொள்ளும் அளவிற்கு நம் நிதியமைச்சரின் அறிவு வளரவில்லை எனினும்,

'செந்தமிழ் நாடெனும் போதினிலே
- இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே'

★

'காவிரி தென்பெண்ணை பாலாறு
- தமிழ்
கண்டதோர் வையைப்
- பொருநை நதி
மேவிய ஆறு பலவோடத் - திரு
மேனி செழித்த தமிழ்நாடு'

★

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே
- தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு
- நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்
- றோர்மணி
யாரம் படைத்த தமிழ்நாடு'

என்றெல்லாம் சிறப்பித்துக் கூறப் பெறுகிற பாரதியாரின் பாடல் வரிகளைப் படித்துப் புரிந்துகொள்ளும் அளவிற்குக் கூடவா வளரவில்லை?

சாமி பழனியப்பன்

இல்லையென்றால் அது அவருக்கு அல்ல — நமக்குத்தான் அவமானம். ஆம், வள்ளுவன் செய்த திருக்குறளை வையகத்திற்கே தந்து பெரும் புகழ் பெற்ற தமிழ் நாட்டில் பாரதியாரின் பாடல் வரிகளைப் படித்துப் புரிந்து கொள்ளக்கூட முடியாத ஒருவரை மதியமைச்சராகப் பெற்றிருக்கும், நமக்குத்தான் அவமானம்!

வள்ளுவனை உலகிற்கே தந்து அதன் மூலமாகப் பெரும் புகழ்பெற்றது தமிழ்நாடு என்றால், தமிழ்நாடு என்ற பெயர் எப்படி உலகுக்குத் தெரியாமலிருக்க முடியும்? இத்தகைய பிரச்னைகளிலெல்லாம், அமைச்சர் தன்னைப்போலவே மற்றவர்களையும் மதிப்பது அறிவுடைமையல்ல. மனிதப் பண்புமல்ல என்பதை நமது அமைச்சர்கள் உணர வேண்டும். மானத்துக்கு இழுக்கு ஏற்படுமானால் உயிர் வாழாத நல்ல பண்பினர் ஆயிற்றே தமிழர்கள், அவர்கள் வழி வந்த அமைச்சரா இப்படி நடந்து கொள்வது? ★

ராணி

தமிழ்ப்பித்தன்

காலை மணி பத்து. டைரக்டர் தனசேகரன் சாய்வுநாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தார். அவரது கையிலிருந்த சிகரெட், புகைவண்டியைப் போலப் புகையைக் கக்கிக் கொண்டிருந்தது. டைரக்டர் ஏதோ சிந்தனையிலீடுபட்டிருந்தார். கடந்த ஓராண்டுக் காலமாக அவர் அடைந்துவரும் ஏமாற்றம், புறக்கணிப்பு யாவும் அவரது மனத்திரையில் சினிமாப் படம்போல் ஒன்றன்பின் ஒன்ருகத் தோன்றிமறைந்தன. கடந்து பத்துவருட சர்வீல் டைரக்டர் தனசேகரனுக்குக் கீழ்ப்படியாத நடிகர்களே கிடையாது. டைரக்டர் தனசேகரன் என்ருல் போதும், நடிகர்களுக்கெல்லாம் ஒரே பயம். அவர் எந்த நடிகை மீதாவது கண் வீசிவிட்டால் போதும், அந்த நடிகையை எப்படியும் அடைந்தே தீருவார். அல்லாவிடில் அவர் மனமும் அடங்காது; அவருக்குத் தூக்கமும் வராது. அப்படியிருக்கும் போது நேற்று வந்த நடிகை ராணி அவரது ஆசையைப் பூர்த்தி செய்ய மறுத்துவிட்டதை எண்ணும்போது பிரபல டைரக்டருக்குக் கோபம் வரத்தானே செய்யும்? அவர் நினைத்தால் நடிகையின் மதிப்பையே படத்தின் மூலம் குறைந்துவிட முடியும். நடிகை ராணி முதலாளியின் செல்வாக்கைப் பெற்றுவிட்டதால் தன்னை மதிக்கவில்லை என்ற உண்மையைத் தனசேகரன் அறிந்துதான் இருந்தார். இதை மீண்டும் எண்ணும் போது அவருக்கு ஆத்திரமும் கோபமும் அளவின்றி வந்தது. எப்படியும் ராணியை அடைய வேண்டும், இல்லாவிடில் பழி தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற முடிவிற்குவந்தார், இதற்குள் சிகரெட் தீர்ந்து அவரது விரலைச் சுட்டுவிடவே, அவசரமாய் எழுந்தார். அந்தநேரத்தில் கடிகாரம் பதிைென்று மணிகளை உதிர்த்தது.

அன்றுதான் 'ராணி மந்தாகினி' படத்தின் கடைசிக் காட்சி படமாக்கப்பட வேண்டிய நாள். டைரக்டர் தனசேகரன் அவசர அவசரமாகத் தன் காருக்குள் ஏறினுர். கார் 'மாருதி ஸ்டுடியோ'வை நோக்கி விரைந்தது.

ராணி புது முகம். நாடெங்கும் வலை போட்டுத் தேடியதில் பட முதலாளியின் கண்ணில் கடைசியாகச் சிக்கிவிட்ட வனிதை அவள். அழகு ததும்பும் முகம்; ஆண்களை மயக்கும் அங்க அமைப்பு, காண்போரைக் கவரும் கண்கள். 'செக்ஸ் அப்பீலுக்'கு அஞ்சாத திருவுள்ளம். இது தான் ராணியின் சுருக்கமான படப்பிடிப்பு. இவ்வளவு சிறப்பியல்புகள் கொண்டதனுல் அவள் பட முதலாளியின் அன்பையும் ஆதரவையும் அதிவிரைவில் பெற்றுவிட்டாள். அவளுக்கென்று காரும் பங்களாவும் வாங்கித் தந்தார் படமுதலாளி. காரணம், ராணியைக் கொண்டு ஐந்தாறு படங்கள் எடுக்கத் திட்டமிட்டுவிட்டார் அவர். தமிழ்நாட்டின் பிரபல பட முதலாளியே ராணிக்கு இவ்வளவு ஆதரவு தந்ததனுல் மற்ற பட முதலாளிகளும் ராணியை தங்கள் படங்களுக்கு ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

டைரக்டரின் கார் ஸ்டுடியோவை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. காரினுள் அமர்ந்திருந்த டைரக்டர் தனசேகரனின் மனதிலே அமைதியில்லை. தனது முடிவை வெகு விரைவிலே செயலாக்க வேண்டுமென்ற எண்ணம் அவரது உள்ளத்தில் வேரிட்டிருந்தது. நடிகை ராணி—அவளின் கர்வம்—அதனை ஒழிக்க வழி இவைபற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருந்தார். திடீரென்று அந்தப் பழைய சம்பவங்கள்—அவரது மதிப்புக்கே பங்கம் விளைத்த நிகழ்ச்சிகள் அவர் மனத் திரையில் விழுந்தன.

★

அன்று 'மந்தாகினி' படத்தின் ஆரம்ப விழா. சில முக்கிய காட்சிகள் சுட்டுத் தள்ளப்பட்டன. ராணி புதிய முகம் ஆயிற்றே, எவ்வாறு நடிப்பாளோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தார் டைரக்டர் தனசேகரன். அவரது கவலைக்கே இடமில்லாத வகையில் ராணி அபாரமாக நடித்துவிட்டாள். தனசேகரன் சந்தோஷப்பட்டுக் கொண்டார். அன்றைய படப் பிடிப்பு முடிந்தவுடன் அவர் "கன்கிராஜுலேசன்" என்று சொல்லிக் கொண்டே ராணியுடன் கை குலுக்கினுர். கை குலுக்கியதுதான் தாமதம், உடனே ராணி தன் கையில் தேள் கொட்டியது போன்று வெடுக்கென்று கையை எடுத்தாள். டைரக்டர் கை குலுக்கும்போது ஏதோ விஷமம் செய்து விட்டார் போலிருக்கிறது. "டைரக்டர் சார்! இந்த மாதிரி வேலைகள் எல்லாம் நம்மிடம் நடக்காது. நினைவிருக்கட்டும்" என்று நேருக்கு நேர் சொல்லிவிட்டாள் ராணி, தனசேகரனுக்கு அவமானம் தாங்கவில்லை.

ஒரு முறை வெளி நாட்டு நடிகர் கோஷ்டி தென்னுட்டிற்கு விஜயம் செய்திருந்தது. அக்கோஷ்டி பிரசித்திபெற்ற மாருதி ஸ்டுடியோவுக்கும் விஜயம் செய்திருந்தது. அக்கோஷ்டி ஸ்டுடியோவைச் சுற்றிப் பார்த்தது. பிரபல டைரக்டர் தனசேகரனின் திறமையைக் கண்டு புகழ்ந்தனர் வெளிநாட்டுநடிகர்கள். அச்சமயத்தில் டைரக்டர் வெளிநாட்டு நடிகர் கோஷ்டிக்கு ராணியை அறிமுகம் செய்வதன் மூலம் ராணியின் அன்பை அடைய நினைத்தார். அதற்கெல்லாம் மசிந்தவளா ராணி? சுருக்கமாக டைரக்டரிடம், "டைரக்டர் சார்! தாங்கள் என்னை அறிமுகம் செய்து வைக்க வேண்டியதில்லை. நிறுத்துங்கள் உங்கள் புதுவிதமான அறிமுக வேலையை" என்று கோபமாக்க கூறிவிட்டு வெடுக்கென்று சென்றுவிட்டாள். வெளிநாட்டு நடிகர் கோஷ்டிக்கு இது விஷயம் புரியவில்லை. டைரக்டருக்கு வந்த கோபத்திற்கு அளவே இல்லை. பட முதலாளியின் தயவால்தான் ராணி இவ்வளவு ஆட்டம்போடுகிருள் என்பது அவருக்குத் தெரியாமலில்லை,

ராணி நல்ல அழகியானதால் அவளை டைரக்டரால் மறக்கவே முடியவில்லை. அவளது அழகு சினிமா விசிறிகளை வாட்டியதோடு அமையாமல் டைரக்டர் தனசேகரனையே வாட்டியது. தன்னை ராணி புறக்கணித்தும், அடுத்த தடவையாவது அவளது 'திருவுள்ளம் இரங்காதா' என்று ஏங்கினுர் அவர். அச்சமயத்தில் ராணியின் பிறந்த நாள் விழாவிற்கு அவருக்கு அழைப்பு வந்தது. 'இது நல்ல தருணம்' என்று எண்ணிக் கொண்டார் அவர். ராணியின் பிறந்த நாள் விழாவின்போது பலவிதமான நகைகள் வாங்கிச் சென்ருர் அவற்றை ராணியின் கையிலேயே கொடுக்க விரும்பினுர். ஆனுல் ராணி, டைரக்டருக்கு அந்த வாய்ப்பைத் தரவில்லை, நகைகளைத் தன் மேஜையில் வைத்துவிடுமாறு சொல்லிவிட்டாள். டைரக்டர் பெருமூச்சுவிட்டுக் கொண்டே மேஜையின்மேல் வைத்தார். ராணி, டைரக்டரின் ஆட்டைக் கொடுத்துப் புலியைப் பிடிக்கும் திட்டத்தை அறிந்து கொண்டாள். அதனுல் டைரக்டர் வீடு திரும்பின பின் அவர் கொண்டு வந்த நகைகளை அவருக்கே திரும்ப அனுப்பிவிட்டாள் இம்முறை டைரக்டரின் மூக்கு நன்ருக அறுபட்டுவிட்டது. இதை எல்லாம் எண்ணிக் கொண்டு வந்தபோது டைரக்டரின் 'ஹிட்லர் மீசை' கூட முறுக்கேறித் துடித்தது.

★

கார் நின்றது. ஸ்டுடியோ வந்து விட்டதை டைரக்டர் உணர்ந்தார். காரிலிருந்து இறங்கிக் கதவைப் படாரென்று கோபத்தில் சாத்தினுர். டிரைவர் கூடப் பயந்துவிட்டான். விர்ரென்றுஸ்டுடியோவினுள் நுழைந்தார் டைரக்டர் தனசேகரன்

அன்று மந்தாகினி' படத்தின் கடைசிக் கட்டமானதால் ஒவ்வொருவரும் சுறுசுறுப்பாக வேலை செய்தனர். செட்டிங்ஸ் அற்புதமாக அமைந்துவிட்டன. பயங்கரமான அமைதி அங்கே நிலவியது. தயாரிப்பாளர்களுக்குக்கூட அச்சம் தரும் வகையில் இருள் அங்கு நிலவியது. கடைசிக் கட்டம் மிக உன்னதமாக இருக்கும் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் இருந்தது. டைரக்டர் தனசேகரன் தனது உதவியிடம் "பார்த்துக் கொண்டிருங்கள்; இதோ வந்துவிடுகிறேன்" என்று சொல்லிச் சென்றுவிட்டார்.

படப்பிடிப்பு ஆரம்பமாகிவிட்டது. கதாநாயகி (ராணி) மாடியில் தனியாக அமர்ந்து கொண்டிருந்தாள். வில்லன் மிருகநாதன் வேகமாகஓடி வந்து "அடி கள்ளீ! நம்பினவனை மோசம் செய்த நயவஞ்சகி! நீ ஒரு பெண்ணு? உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று கூறிக் கொண்டே கதாநாயகியை நெருங்கினுன். தன் கையிலுள்ள கத்தியைக் கதா நாயகியின் மார்பில் திடீரெனப் புகுத்திவிட்டு ஓடிவிட்டான். "ஐயோ செத்தேன்" என்று கூறிக் கொண்டே கதாநாயகி கீழே விழுந்தாள். அப்போது அவள் எழுப்பிய ஒலி தத்ரூபமாகவே இருந்தது. எல்லோரும் ராணியின் நடிப்புத்திறமையைக் கண்டு வியந்தார்கள். ஐந்து நிமிடங்கள் ஆயின. ராணி எழுந்திருக்கவே இல்லை. "போதும் எழுந்திருங்கள்" என்று உதவி டைரக்டர் சொன்னுர். அப்போதும் அவள் எழுந்திருக்கவில்லை. யாவரும் பீ அடைந்தனர். அருகில் சென் பார்த்தனர். இரத்தம் பெரு கெடுத்து ஓடியிருந்தது. ராணியி

— 10-ம் பக்கம் —

எண்ணக் குவியல்! எழிலூறும் எழுத்தாரம்!

கண்ணதாசன்

எழுதும்

புதிய தொடர்கதை

மனம் போல வாழ்வு

விரைவில் ஆரம்பமாகிறது!

வேலங்குடித் திருவிழா

கண்ணதாசன்

24

முன்கதைச் சுருக்கம்:—

[சின்னப்ப பிள்ளை மகள் இந்திராவுக்கும் எழுத்தாளன் பாலனுக்கும் திருமணம் நடைபெற்றது.

இந்திரா, கணவன் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டாள். பாலனின் தந்தை சொக்கப்ப பிள்ளையின் விருப்பப்படி எல்லோரும் மாப்பிள்ளை வீட்டிற்குப் புறப்பட்டனர். மணமக்கள் சொக்கப்பரின் காரில் வந்துகொண்டிருந்தார்கள். இந்திராவின் அண்ணன் சுந்தரமும் நண்பர்களும் முன் காரில் சென்று கொண்டிருந்தனர். அந்தக் காருக்கு முன்னல் ஒரு அழகு மங்கை விழுந்து கிடந்தாள். அப்பெண்ணைச் சொக்கப்பரின் வீட்டிற்குக் கொண்டு சென்றனர்.

பாலன், அம்பிகா எனும் அந்தப் பெண்ணை இரவு சந்தித்தான். அவளை வீட்டைவிட்டுப் போய்விடும்படி வேண்டினன் அவள் ஒரு கடிதத்தை வைத்துவிட்டுச் சென்ருள். அதை இந்திராவின் தங்கை கமலம் வெளியிலிருந்து கவனித்தாள். பாலன் வெளிச் சென்றபின் கடிதத்தை எடுத்துப் படித்தாள். அதற்குள் திரும்பி வந்த பாலன், அவளிடமிருந்து கடிதத்தைப் பறித்தான். அங்கிருந்து சென்ற அம்பிகா புதுக்கோட்டை சென்ருள். அதற்குள் கமலம் முதலியோர் புதுக்கோட்டைக்கு வந்துவிட்டனர் அம்பிகா கமலத்தின் வீடு சென்று எல்லோரையும் சந்தித்தாள். கமலத்துடன் பேசிக் கொண்டிருந்தாள். சுந்தரத்திடமும் பேசினுள். அதற்குள் மங்கையர்க்கரசி, அம்பிகாவை 'வெளியே போ' என்று சொல்லி அனுப்பினுள். சுந்தரமும் அவளைத் தேடி வெளியே சுற்றினன். இருவரும் சந்திந்தபோது போலீஸ் லாரி ஒன்று வந்தது. போலீஸ் அதிகாரி அவர்கள் இருவரையும் போலீஸ் லாரியில் ஏற்றி வந்தார். ஸ்டேஷனில் சப் இன்ஸ்பெக்டர், அவர்களை விசாரித்து, அன்று இரவே அவர்களை இரண்டு போலீசாருடன் சென்னைக்கு அனுப்பினர். ரயிலில் சென்று கொண்டிருந்தபோது, சுந்தரம் அம்பிகாவிடம் அவளது வாழ்க்கை வரலாற்றைக் கேட்டான். அவளும் சொன்னுள்.

போலீஸ் ஸ்டேஷனில் சுந்தரம் பாலன் என்று தவருகக் கருதப்பட்டுக் கைது செய்யப்பட்டதால் சுந்தரம் விடுதலை செய்யப்பட்டான். பாலனைச் சிறையில் தள்ளினர்கள். அம்பிகா அவளது தாயாரோடு கட்டாயப்படுத்தி அனுப்பி வைக்கப்பட்டாள்.

சுந்தரம், இந்திராவின் உடல் நிலை மோசமானது தெரிந்து அவளைப் பார்க்க ஊருக்குச் சென்ருன். அவனை விட்டுப் பிரிக்கப்பட்ட அம்பிகா சுந்தரத்தைப்பற்றி எண்ணமிட்டுக்கொண்டிருந்தாள். வெளியே புறப்பட்டாள். தாய் தடைசெய்தாள். மீறிச் சென்றுவிட்டாள் அம்பிகா. அவள் போலீஸ் ஸ்டேஷன் சென்ருள். பாலன் கைதுசெய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டதையும் அறிந்து கொண்டாள். சிறைச்சாலையை நோக்கி நடந்தாள். பாலனைப் பார்த்து எப்படியும் காப்பாற்றுவதாகச் சொல்லிவிட்டுத் திரும்பினுள். வக்கீலை ஏற்பாடு செய்தாள்.

மறுநாள், மேலைச்சிவபுரி சென்ருள். ஊருக்குள் நுழையும்போது எதிரே ஒரு பிண ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. அதை இந்திரா என்று நினைத்துக் கொண்டாள். பின்னர் வனஜா கிரிஜா என்ற நாட்டியக்காரிகளுடன் சென்னைக்குத் திரும்பினுள். அவர்கள் வீட்டிலேயே அம்பிகா தங்கினுள். மறுபடி வக்கீலைப் போய்ப் பார்த்தாள்.

சிறையிலே சங்கரன் என்ற ஒரு கைதி இருந்தான். அவன் பாலனிடம் தனது வரலாற்றைச் சொல்வான். அவனது மனைவிதான் வனஜா. வனஜாவின் தங்கைதான் கிரிஜா. அம்பிகாவின் ஏற்பாட்டால் பாலன் ஜாமீனில் விடுதலையானுன். பாலனுக்கு இந்திராவின் மரணச் செய்தியைத் தெரிவித்தாள். அன்று இரவே பாலன் தன் ஊருக்குப் புறப்பட்டுவிட்டான். ஊர் வந்த பாலனுக்குத் தெரிந்துவிட்டது இந்திரா இறக்கவில்லை என்று தன் தாய் இறந்த செய்தி கேட்டு அவன் மனம் வருந்தினுன். அம்பிகா தன்னிடம் பொய் சொல்லி விட்டாள் என்று எண்ணிக்கொண்டான். அன்று இரவு பாலன் இந்திரா, கமலம் மூவரும் திரைப்படம் பார்த்தனர்.

தூங்கிக்கொண்டிருந்த அம்பிகாவின் அறையில் ஒரு முரடன் நுழைந்தான். வனஜா என்று அம்பிகாவை எண்ணிக்கொண்டான் அவன். பின்னர் வனஜா இல்லை எனத் தெரிந்துகொண்டான். அம்பிகா "திருடன், திருடன்" என்று குரல் கொடுத்ததும் ஓடிவிட்டான்.

இரண்டு நாட்கள் கழித்து வனஜாவின் வீட்டிற்குப் பட முதலாளி ஒருவர் வந்தார். வனஜாவைத் தனது படத்திற்கு ஒப்பந்தம் செய்துகொண்டார். அம்பிகாவுக்கும் 'நடிக்கலாம்' என்ற எண்ணம் தோன்றியது. அன்று மாலைத் தபாலில் பாலனின் கடிதம் வந்தது. அதைப் படித்த அம்பிகா வருந்தினுள். பாலன் கோபமாகத் தான் எழுதியிருந்தான்.

பட முதலாளியுடன் வனஜா அன்று இரவு பேசிக்கொண்டிருந்தாள். மறுநாள் அம்பிகாவை அறிமுகம் செய்துவைத்தாள் வனஜா.

படமுதலாளி அது முதல் வந்து போனுர். அவர் அம்பிகாவுடன் அளவளாவினுர். தனக்கு அம்பிகாவின் மீதுள்ள அன்பையும் எடுத்துச் சொன்னுர். அவளைத் திருமணம் செய்துகொள்ள விரும்புவதாகவும் சொன்னுர். அவளும் ஒப்புக்கொண்டாள். உடனே ரிஜிஸ்தர் ஆபீஸ் சென்று திருமணம் செய்துகொண்டனர். பட முதலாளி 'சங்கரன்' என்று ரிஜிஸ்தர் ஆபீசில் கையெழுத்துப் போட்டவுடன் அம்பிகாவின் உயிர் நின்றுவிடும்போலிருந்தது.

வேறு வழியில்லாததால் அம்பிகா பட முதலாளி சங்கரனுடன் காரில் சென்ருள். மறுநாள் சங்கரனும் அம்பிகாவும் சென்னையை விட்டுக் கல்கத்தாவை நோக்கிக் காரில் சென்றுவிட்டனர்.

இந்திரா, பாலன், அ... தியாகராய நகரிலே வீடு ப... வசித்தனர். வழக்கு தள்... யாய்விட்டது. இந்திராவின்... யில் சில தழும்புகள் தோ... டாக்டரை அழைத்துப் பார்... பாலன். இந்திராவுக்குக் கு... வந்திருக்கிறது என்று ெ... கொண்டான். இதன் காரண... பாலன் இந்திரா இருவரின்... வில் மாற்றம் ஏற்பட்டது. இ... விடம் இந்த விஷயத்தைப் ... சொல்லவில்லை; மறைத்துவிட்... ஆனல் அவளே டாக்டர் ... தெரிந்துகொண்டாள்.

சுந்தரத்திற்குத் திருமண... பாடு நடைபெறுகிறது என்று... தம் வந்தது. அதனல் அன்... பாலனும் இந்திராவும் ஊரு... புறப்பட்டனர். பெண் ப... போன இடத்தில் இந்திரா ப... கலவரம் ஏற்பட்டது. முடிவி... தப் பெண் சாரதையே சுந்தர... மணக்க ஒப்புக்கொண்டான்.

பாலனின் இதயம் கமல... எண்ணிக்கொண்டே இருந்... இந்திரா இதைத் தெரிந்து... டாள். பாலன் காபி ெ... வந்த கமலத்தின் கையைப்பி... விட்டான். அதை இந்திரா ... விட்டாள். பின்னர் கமலத்... டைகயாகப் பேசி அவள் தன் ... னைத் திருமணம் செய்துகொ... ஒப்புதல் தரும்படி செய்துவிட்...

இதற்கிடையில் பாலனுக்கு... பட்ட கோபத்தை இந்திரா ம... ளுள். கமலத்திடம் தன் கண... மணக்க வேண்டுமென்று கே... கொண்டாள். அதில் வெற்... பெற்றுள்.

சுந்தரத்துக்குச் சாரதை... திருமணம் நடைபெற்றது. அ... இரவு அங்கே ஒரு ரசாபாசம் ... இருந்தது. அதைத்தடுத்து நி... ளுள் இந்திரா. அதனல் பா... கோபங்கொண்டு சென்னை... புறப்பட்டான். இந்திரா அ... காலில் விழுந்து மன்றாடி... பாலன் மறுத்தான். இந்... கையிலே கத்தியை எடுத்துக்கொ... டாள். வெளியே இருந்த க... ஓடோடி வந்தாள்.]

இந்த இதழில்

இந்திரா திரும்பினாள். கமலம் உள்ளே ஓடிவந்தாள்.

"ஏன் கமலம் பதறுகிறாய்! நான்தற்கொலை செய்துகொண்டு விடுவேன் என்றா? பைத்தியமே! இனி எனக்கு ஏது சாவு? நான் எப்போதோ செத்துவிட்டேன். மிச்சமிருக்கும் பிணத்தை உருத்தெரியாமல் ஆக்கிவிடட்டும், அத்தான்! அவர் கையால் அழிவதைத் தவிர இந்த உடம்புக்கு வேறென்ன பாக்கியம் இருக்கப்போகிறது..!" என்றாள் இந்திரா.

கமலம் என்ன பதில் சொல்வாள்? தன் வயமற்ற அந்தப் பரிதாபத்துக்குரியவள் அக்காளின் கைகளை மட்டும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள். பாலன், இந்த நாடகத்தில் கரைந்துவிடுபவனாக இல்லை. ஆனாலும், இன்னும் கொஞ்ச நேரம் தனக்காக இந்திராவும் கமலமும் கலங்கவேண்டும் என்ற நினைப்பில் படுக்கையில் உட்கார்ந்தான்.

"கமலம்! நீ போம்மா!" என்று கலங்கிய குரலில் சொன்னாள் இந்திரா.

அவள் கைகளை விட்டுவிடாமல், "அக்கா!" என்று விம்மினாள் கமலம்.

"நான் ஒன்றும் செய்துகொண்டு விடமாட்டேன்; கலங்காதே கமலம்! சாகவேண்டுமென்ற எண்ணம் வந்தாற்கூட உனக்காக உயிரோடிருப்பேன். போம்மா!" என்றாள் இந்திரா. வேண்டியவர்களுக்காகக் கண்ணீர் வடிப்பதில் ஒரு திருப்தி இருக்கத்தான் செய்கிறது.

கமலம் கீழே இறங்கிச் சென்றாள்.

இந்திரா, பாலன் கையோடு வைத்திருந்த பெட்டியை மெதுவாக எடுத்து, கட்டிலுக்குக் கீழே வைத்தாள். அவனது காலணிகளைக் கழற்றினாள். பாலன், மறுக்க நினைத்தவன்-பிரக்ஞையற்று உட்கார்ந்திருந்தான்.

"அத்தான்! நாளைக்கே நாம் புறப்பட்டுவிடுவோம். அதற்குள் கமலம் விஷயமாகப் பேசி முடித்துவிடுகிறேன். என்னை நம்புங்கள். உங்கள் வாழ்வுதான் என் வாழ்வு! அத்தான்!..."-இந்திரா குழம்பிக் குளறினாள். எப்படியாவது அவன் திருப்தியுற்று, "சரி இந்திரா! உன் சொல்லை நான் மறுப்பேனா?" என்று சொல்லிவிட மாட்டானா



.... கமலம் ....

என்பதே அந்த வெள்ளை மனத்தின் ஆசை. ஆண்கள் என்ன அவ்வளவு 'இருதயம்' படைத்தவர்களா? பாலனும் அவர்களில் ஒருவன்தானே! பாலன், பேசாமலேயே இருந்தான்.

"சொல்லுங்கள் அத்தான்!" என்று கம்மிய குரலில் கேட்டாள் இந்திரா.

பாலன் இப்போது ஒரு திட்டம் போட்டுக் கொண்டிருந்தான். அவனது கற்பனை உள்ளம் அந்தத் திட்டத்தைப் பிரமாதமான அளவில் ஆராய்ந்தது. அது சரியான வழி என்ற முடிவும் தோன்றவே, பாலனின் முகபாவம் மாறிற்று. ஒரு புதுமலர்ச்சி தட்டுப்பட்டது. இந்திராவை ஏறிட்டுப் பார்த்தான். "இங்கே வா!" என்றான். இந்திரா அவன் எதிரே கொஞ்ச தூரத்தில்-அதே படுக்கையில் அமர்ந்தாள்.

.... பாலன் ....

"இந்திரா! உன்மீது எனக்கு வெறுப்பில்லை. என்னிடத்தில் உனக்கு எவ்வளவு பிரியம் இருக்கிறது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். சும்மா விளையாட்டுக்குத்தான், போய்விடப் போவதாகப் பயமுறுத்தினேன். இவ்வளவு தூரம் எனக்காக வளைந்து கொடுக்கும் உன்மனம் ரொம்பவும் துன்பப்பட்டுவிட்டது. அதை மறந்துவிடு! நாளைக்கு நாம் சென்னைக்குப் புறப்பட்டு விடுவோம்......" என்றான் பாலன்.

இந்திராவின் மனம் குளிர்ந்தது. உற்சாகம் பெருக்கெடுத்தது. அத்தான் மனது மாறிவிட்டது; தன் கண்ணீர் அந்தக் கல்லைக்கரைத்து விட்டது என்று இந்திரா நம்பினாள். "அத்தான்!" என்றாள் ஆசையோடு. பெண் மனம்!-அதைப் புரிந்து கொள்ளவே முடியாது என்கிறார்கள், மடையர்கள்! ஏன் முடியாது? அன்போடு இரண்டு ஆறுதல் வார்த்தைகள் சொன்னால், பெண்மனம் எல்லாவற்றையும் கக்கிவிடும்!

"இந்திரா! நாளைக்குக் கமலத்தையும் அழைத்துக்கொண்டு போவோம்..." என்று இழுத்தான், பாலன். தன் திட்டத்தின் சாரத்தை இப்படி ஆரம்பித்தான். இந்திரா திடுக்கிட்டாள். அதை அறிந்த பாலன், "பைத்தியமே, நான் தவறாக அங்கு நடந்துவிடுவேன் என்று நினைக்கிறாயா? நிச்சயமாகச் சொல்கிறேன். இனி, திருமணம் ஆகும் வரை, அவளைத் தொடமாட்டேன்! என்னை நம்பு. ஒரு ஆறுதலுக்காகத்தான், அவளையும் அழைத்துப்போக விரும்புகிறேன். உனக்கும் துணையாக இருக்கும்!..."

—இந்திரா, இந்தப் பேச்சையும் நம்பினாள்.

"சரி அத்தான்!" என்றாள். பாலன் முகம் அளவுக்குமேல் மலர்ந்தது. இந்திரா பாலனிடம், "இருங்கள்; வந்துவிடுகிறேன்" என்று கூறிவிட்டுக் கீழே இறங்கிச் சென்றாள்.

சிறிது நேரத்தில் திரும்பிவந்து, "அப்பா, அம்மாவிடம் சொல்லிவிட்டேன். நாளைக்கு நாம் கமலத்தையும் அழைத்துக்கொண்டு போகிறோம்" என்றாள். பாலன் இந்திராவை அணைத்துக்கொண்டான். அப்பொழுது அவளுக்குக் குஷ்டம் இருப்பது அவனுக்குத் தெரியவில்லை.

கமலம் அமைதியிழந்தாள். பாலன் ஏதோ திட்டம் போட்டிருக்கிறான் என்பதைப் புரிந்துகொண்டாள். "இனி நடக்கப்போகிறது ஏதோ ஒரு நாடகம்! அதிலிருந்து எப்படித் தப்புவோம்?" என்று இப்பொழுதே கவலைப்பட ஆரம்பித்தாள்.

மறுநாள் மாலை இரயிலில், முதல் வகுப்பில், பாலன், இந்திரா, கமலம்-மூவரும் அமர்ந்திருந்தனர். அவர்களை வழியனுப்பிவிட்டு, இந்திராவின் முகத்தைத் தங்கள் மனத்திரையிலிருந்து அகற்றமுடியாமல் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள், சுந்தரமும் சாரதையும்.

பாலகாண்டம் முற்றிற்று.

(அடுத்த இதழில் சுந்தரகாண்டம்)

திருமண அழைப்பு

பேரன்புடையீர்,

வணக்கம். 15-4-56 ஞாயிறு காலை 10 மணிக்கு சென்னை, ராயப்பேட்டை, புதுப்பேட்டை கார்டன் தெரு, 3-ம் எண் இல்லத்தில் திரு. எம். சுடலைக்கும் எனது மகள் திருமதி ஆர். புஷ்பவல்லிக்கும் கலைவாணர் திரு. என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் திருமணவிழாவிற்குத் தாங்கள் வருகை தந்து விழாவினைச் சிறப்பிக்க வேண்டுகிறேன்.

தங்கள்
என். எஸ். நடராஜன்.
(எம். ஜி. ஆர். நாடக மன்றம்)

தீச்சுடர்

தீச்சுடர் மே திங்கள் மூன்றும் நாள் வியாழக்கிழமையிலிருந்து வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் முடியும் நிலையிலிருக்கிறது. ஏஜெண்டு நிபந்தனைத் தாள்களைக் கேட்டு எழுதியிருக்கும் தோழர்களுக்கு ஏப்ரல் 16-ந் தேதி பாரங்கள் அனுப்பிவைக்கப்படும். அதில் விளக்கங்கள் தரப்பட்டிருக்கிறது. அதன்படி பூர்த்திசெய்து டிபாசிட் தொகையைக் கீழ்க்காணும் அலுவலக முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுகின்றோம்.

சி. பி. சிற்றரசு,
ஆசிரியர்
தீச்சுடர்,
31, தையப்ப முதலி தெரு,
சென்னை-1.

சிலம்பு வழங்கும் செல்வம்

இராசன்

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை, எம். ஏ., எல். டி.

புறக்கணிப்புக் குழுவைப் பேராசிரியர் ஆதரித்த காலத்திலும், அவர் ஆதரவை அது பெற்றதேயன்றி, அதன் ஆதரவை அவர் பெறவில்லை. அவர் ஆராய்ச்சி பல்கலைக் கழக மேடை ஏறவில்லை. இதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. அவர் ஆராய்ச்சிகள் இராவ்சாகிப் வையாபுரிப் பிள்ளை அவர்கள் கருத்துக்களின் நிழல்களாயிருந்தனவேயன்றி, தனித்தன்மையுடையவையாகவோ, இராவ்சாகிப்பின் கருத்துக்களுக்கு வலிமை தருபவையாகவோ அமையவில்லை. முன்னுரை தர இசைந்த இராவ்சாகிப் அவர்களே பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை ஆட்சியிலிருந்தாலும் அவர் பல்கலைக்கழக முத்திரையைத் தம் நிழலுக்குத் தர அவர் துணியவில்லை.

இரண்டாவதாக, பேராசிரியர் ஆராய்ச்சியாளர் என்ற முறையில் ஆயிரம் பொற்கொல்லரைப் பலியிட்ட செய்தியை ஆராய்ச்சி நோக்கமாக முன் வைக்கவில்லையென்றாலும், சரியாகவோ தப்பாகவோ மனிதரென்ற முறையில் அதுவே அவரை இயக்கிற்று என்று பலரும் எண்ணினர் என்பதில் ஐயமில்லை. இது ஆளும் இனத்தவரான ஆரியரைப் பற்றிய செய்தியாக இருந்திருந்தால், இத்தகைய ஓர் உள்நோக்கமே அவர் நூலுக்கு மேலோர் ஆதரவையும், மேலிடத்தார் ஆதரவையும் கட்டாயம் தேடித் தந்திருக்கும். துரதிருஷ்டவசமாக அது பொற்கொல்லரைப் பற்றிய செய்தியாதலால் அது மேலோரை உறுத்தி இயக்கிப் புயல் எழுப்ப முடியவில்லை என்பது தெளிவு.

பெரியார் ஈ. வே. ரா., அறிஞர் அண்ணா சூழல்கள்

புறக்கணிப்புக் குழுவுக்கு நேர் மாறான நோக்கமுடையவர்களின் கோட்டை திராவிட இயக்கம். அதன் தோற்றுதல் தலைவராய் இயங்கிய பெருமையுடைய பெரியார் ஈ. வே. ரா. தமிழினத்தைத் தட்டி எழுப்பியவர். தமிழ்ப் பேரறிஞர், தமிழ்ப் பெருங்கவிஞர், தமிழகப் பேரறிஞர் ஆகியவர்களின் மரபுகளை மக்கள் மன்றத்துக்கு அறிமுகப்படுத்தி, அதன் மூலம் அடிமை ஆட்சிக்காலத்திலே ஆளுவோருக்கும் ஆளப்படுவோர்க்கும் இடையே இடப்பட்டிருந்த மாயை இருள்திரைகளையும் மருள்திரைகளையும் நீக்க உதவியவர் அவர். ஆயினும் அவ்வத்துறைகளில் அவ்வத்துறை அறிஞர்களை, கலைஞர்களைக் கலந்தன்றி அவர் எந்த முடிக்கும் என்றும் திடுமென வந்தவரல்ல. எந்த முடிவின்மீதும் திடுமெனக் கொதித் தவருமல்ல. திருக்குறள் வகையில் அத் திருநூலை ஏற்பதா, மறுப்பதா, ஏற்றுமறுப்பதா, மறுத்து ஏற்பதா என்று பல்லாண்டுக் காலம் அவர் தயக்கமுற்றிருந்ததையும், 1949-ம் ஆண்டிலேயே திருக்குறள் தமிழர் பெரும் நூல்தான் என்ற முடிவை அவர் துணிந்து ஏற்று அதைப் பரப்ப முன் வந்ததையும் திராவிட இயக்கத்தவர் மட்டுமின்றி மறுமலர்ச்சி இயக்கத் தோழர் அனைவரும் அறிவர்.

அத்தகைய பெரியார் சிலப்பதிகார வகையிலும் இதே போன்ற தயக்க மயக்க நிலையிலேயே இருந்து வந்திருப்பது இயல்பு; இது புரியக் கூடியதே. ஆனால் உலகின் போதாக் காலமாக தமிழகத்திலேயே பிறந்து விட்ட உலகப் பெரியார்கள் பலருடன் – சிந்தனைச் சிற்பி சிங்காரவேல் செட்டியார், தமிழ்த்தென்றல் திரு. வி. கல்யாணசுந்தரனார், மறைமலை அடிகளார், பா. வே. மாணிக்க நாயகர், கைவல்யத்தடிகள், பண்டித அயோத்தியாதாசர் முதலியோருடன் தோழமை, அன்புப்பிணக்கு, அறிவுப்போட்டி ஆகிய மூவகைத் தொடர்புகளும் கொண்டவர் அவர். இவர்களைப் போன்ற அறிஞர், கலைஞர், ஆராய்ச்சியாளர் மரபு அற்றுவிடவில்லை – மறுமலர்ச்சிக்காலம் அதை அவர்களும் கனவு காணாத அளவிலும், வகையிலும் சீரிய முறையில் வளர்த்தே வருகிறது.

ஆனால் பழம் பேரறிஞர்களில் பலர் நம் உலகைவிட்டு அகன்றுள்ளனர். மீந்தவர் ஒளிகள்கூட பெரியார் ஈ. வே. ராவை இப்போது தீண்டுவதில்லை. அத்துடன் தமிழகத்தின் அறிவு, கலை, தொண்டு ஆகிய மூன்றின் இணைகூட்டாக எழுந்துள்ள புத்திள ஞாயிருகிய கலை அறிஞர் சி. என். அண்ணாத் துரையைச் சுற்றி அவை சுழலுகின்றன. இந்நிலையில்தான் பெரியார் ஈ. வே. ரா. அறிவுத் தோழமையும் கலைத் தோழமையும் அற்ற வெற்று அரசியல் தலைவராய், புலமைப் பிரதிநிதித்துவம், மக்கள் பிரதிநிதித்துவம், மக்கள் தொடர்பு ஆகியவை அற்ற தலைவராய், சிலம்பின் ஒளி நிழல்கூறுகளை விரித்தறிய முடியாத மயக்க நிலைக்கு ஆளாக நேர்ந்தது.

கதிரவன் ஒளியல்ல என்ற காரணத்தால் நிலவு இருளாய் விடாது. அது போல, வறண்ட பகுத்தறிவு நூலல்ல என்ற காரணத்தால் கலைப்பெரு நூலான சிலப்பதிகாரம் அதற்கு மாறான மருள் நூலாய் விடமுடியாது. அது அறிவோடு கூடிய கலை நூல்; அதாவது அருள் நூலேயாகும்.

இங்ஙனம் அறிஞர், கலைஞர் ஆதரவற்ற பெரியார் ஈ. வே. ரா. அறிஞர் உலகிலோ, கலை உலகிலோ, இரு சாரார் உளத்துடிப்பினிலும் அதிர்வுறும் மறுமலர்ச்சிக் காலத் தமிழ்ப் பொதுமக்களிடையிலோ முன்கொண்டிருந்த செல்வாக்கை இழந்தவராகியுள்ளனர். அவர் ஆதர்வு இன்னும் ஒரு பேராசிரியரைத் தமிழகத்துக்கு அறிமுகப்படுத்தி வைக்கப் போதியதேயானாலும், அத்தகையர் அறிவுக்கு வலுத்தருவதிலோ, அதற்கு விளக்கம் அளிப்பதிலோ அது இன்று செயலற்றதாகியுள்ளது.

இராவ்பகதூர்கள் அருளிரகத்தாலோ, பெரியார்கள் ஆதரவாலோ பேராசிரியர் பெறுதுபோன மக்கள் அறிமுகத்தைத் தான் இள எழுத்தாளர்களிடையே ஒரு முழுநிலாப் போன்று நிலவும் கண்ணதாசனை எதிர்ப்பதன்மூலம் அவர் அடைய முற்பட்டுள்ளார் எனலாம்.

செட்டிநாடும் தமிழும்

காங்கிரஸ் போன்ற அகிலஇந்திய அரசியலியக்கங்களும் பிரமஞான சங்கம் போன்ற உலக ஆன்மிக இயக்கங்களும் தமிழகத்தில் வீசிய காலம் இருபதாம் நூற்றுண்டின் தொடக்கம், மறுமலர்ச்சிக்கு முற்பட்ட ஓர் இருட்காலமாகும். தமிழகம் தமிழை மறந்து ஆரியத்தையும் இந்திய தேசியத்தையும் மேலை உலக மோகத்தையும் அணைத்து மகிழ்ந்த காலம் அது. ஆனால் அக்காலத்திலும் தமிழ்மணம் மாறாத தமிழகப் பகுதிகளில் ஒன்றாக, தமிழ்ப் பண்பு தளராது தழைக்கும் தலைப்பகுதியாக இயங்கிற்று, இராமனாதபுர மாவட்டம் சார்ந்த செட்டி நாடு. தமிழ் வளர்த்த பாண்டியரின் கிளை மரபுகளாக இராமனாதபுரம் சேதுபதியும் எட்டயபுரம் மன்னரும் இருபுறம்-தமிழகச் செல்வர், சமய வாணரிடையே, 'நாங்கள் தமிழர்' என்று அன்றும் சொல்லக் கூசாத தனவணிகர், திருநெல்வேலிச் சைவர் ஆகிய இரு வகுப்பினரும் இருபாலாக நின்று புறக்கணிக்கப்பட்டிருந்த தமிழுக்கு அன்று ஆதரவளித்தனர். எதிர்ப்புக்களிடையேயும் இருட்டடிப்புகளிடையேயும் அதைத் தொடர்ந்து வளர்க்க முன்வந்தனர்.

தென்பாண்டி நாட்டின் தமிழ் வேர்களாக மேல்புறம் திருவாங்கூர் தமிழகமும் தென்புறம் ஈழத்து யாழ்ப்பாணமும் இயங்கின. 'நான் தமிழன்' என்று சொல்லக் கூசாத சமூக ஆட்சி வகுப்பினர் வாழ்ந்த பகுதிகள் அன்று இவைகளே.

இப்பகுதிகளில் தமிழ்ப் பசும் பயிர் தழைத்தது–தமிழக மறுமலர்ச்சிக்கு வித்தும், உரமும் தந்து, மறைமலை ஊழியைத் தோற்றுவிக்க இப்பகுதிகளே காரணமாயிருந்தன.

மறுமலர்ச்சியின் இளங்குயில்

மறுமலர்ச்சி இப்பகுதிகள் கடந்து ஈரோட்டில் தாவி, காஞ்சியில் கொழுந்துவிட்டு, தஞ்சையில் கோட்டை கட்டி, சேலம் கோயமுத்தூரில் கொடி பறக்கவிடும் இக்காலத்தில், மறுமலர்ச்சித் தாயகத்திலிருந்து புதுப்பயிருடன் பழம் பண்பு, குருத்தோடு விட்டுப் புது மலர்ச்சியைத் தூண்டிவரும் புத்திளம் கலைக்கதிரே கண்ணதாசன்.

திராவிட இயக்கத்தின் புதரிலே மறைந்து நின்று திராவிடப் பூஞ்சோலைக் குயில்மீது இலக்குவைத்து வீசப்பட்ட நச்சுக்கணை, குயிலின் பாட்டை எதுவும் செய்யமுடியாது, செய்யவில்லை. குயில் 'தன்பாட்டுக்கு' பாடிக் கொண்டிருந்தது. அது பறந்து பாடிற்று, பாடிப் பறந்தது. ஆனால் குயிலின் இசை ஆர்வலர்களைத் தட்டி எழுப்பியுள்ளது. குயிலின் குயிலிசை சிலம்பின் சிலம்பிசையுடன் கலந்து புது விளக்கம் தரத் தொடங்கியுள்ளது.

அவ்விரண்டு இசைகளின் அறிவு விளக்கமாக, சிலம்பிசை எதிர்த்த மாற்று இசைகளுக்கு விடை கண்டு, சிலம்புச் செல்வத்தை மீட்டும் மதிப்பிட்டுக் காண்போம்.

சிலப்பதிகாரத்தின் காலமென்ன?

அது கற்பனைக் கதையா, வரலாற்றுக் காவியமா!

அது ஆரியப் பண்பாட்டு நூலா, தமிழ்ப் பண்பின் கருவூலமா? அவற்றின் கலவையா? கலவையாயின் அக்கலவையில் மேம்பட்ட பண்பு யாது?

சிலம்பைத் திருக்குறளுக்கு ஒரு இலக்கியமாகக் கூறலாமா? கூறுவது தவறு?

தமிழ் இலக்கியத்தில், கலை உலகில் அதன் இடம் யாது?

இவை பற்றி ஆராய்வோம்.

புதிய முகவரி :

சாமி பழனியப்பன்,

'தென்றல்'

சென்னை-6.

சிலம்பு நாடக மன்றம் அளிக்கும் சிந்தனை விருந்து !

அறிஞர் அண்ணா

தலைமையில்

பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையாரின்

"காற்றும் மழையும்"

நாடகமாக்கியவர்

இரா. மணிவேந்தன்

22-4-56 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு

சென்னை ஒற்றைவாடையில் நடைபெறும்

பாடல்கள் :

கண்ணதாசன்

நடிகர்கள்: கண்ணதாசன், வளையாபதி முத்துக்கிருஷ்ணன், எஸ். எஸ். பி. லிங்கம், கே. எம். கண்ணபிரான், வனிதா, காந்தா, மல்லிகா மற்றும் மன்ற உறுப்பினர்கள்.

கட்டணம் : 3, 2, 1. 0-8-0.

என். இருட்டினன், செயலாளர்.

அவனி கலக்கிய பவனி ...

— 4-ம் பக்கத் தொடர்ச்சி —

வேண்டும். நான் 36 வருடங்களைக் கடந்துவிட்டேன். ஆனால் 22 வருடங்கள் தங்களுக்காகத் தொண்டு பல புரிந்துள்ளேன். இதோ! நான் செய்த தொண்டிற்கு அரச பதக்கம்'' என்று சொல்லி நெஞ்சைத் தட்டிக்காட்டி விட்டு, ''தொண்டுகள் இவ்வளவு செய்திருந்தும், என்னுடைய உரிமையாம் தங்களுடன் எல்பாவுக்கு வரும் வீரர்களது பெயர்ப்பட்டியலில் என்னுடைய பெயர் சேர்க்கப்படவில்லை! இது எவ்வளவு பெரிய அநீதி! தாங்கள் நீதி தராவிட்டால், அதைப் பெற நான் இரத்தம் கொட்டவும் தயங்கேன்'' என்று கூறிப் பணிந்து நிற்கும் அவ்வீரனது உரை, நெப்போலியனது நெஞ்சை நெகிழச் செய்துவிட்டது.

''என் உடன்வர, உனக்குத் தணியாத ஆவல் இருக்கிறதல்லவா? ஆனால், என்னுடன் வரவேண்டுமென்றால், உன் தாயகத்தை, உன் உற்ற துணைவியை, ஆருயிர்க் குழவியை, ஏன், உனக்குக் கிடைக்கப்போகும் பதவி உயர்வை விடுத்து நீங்கவேண்டும் என்பதைப் பற்றி எண்ணிப்பார்த்தாயா? சிந்தித்தாயா?'' என்று கேட்கிறான், நெப்போலியன்.

''மன்னவா! இது என்னுடைய ஆசையுமல்ல; ஆவலுமல்ல! இது என்னுடைய உரிமை, முறைப்படி கிடைக்க வேண்டிய பெருமை—அதைத்தான் நான் கேட்கிறேன்'' என்று பதிலுரைக்கிறான். ''நன்று, வீரனே, நன்று! நீ என் உடன் வருவதற்கான ஏற்பாட்டைச் செய்கிறேன்'' எனக் கூறியபடி அங்கிருந்து செல்கிறான். வறியவனொருவன், எதிர்பாராது பெருஞ்செல்வத்தை அடைந்தால், அடைவானே மகிழ்ச்சி, அதனினும் பெரிது அவ்வீரன் அப்பொழுது அடைந்த மகிழ்ச்சி.

துரோகமும், பற்றும், கொண்டு அமைவதுதான் அரச வாழ்வும், பதவியும் என்பதற்கு இது நல்ல எடுத்துக்காட்டாகும்.

ஏப்ரல் 19-ந் தேதியும் முடிந்துவிட்டது. இன்னும் ஒரேநாள் தான் இருக்கிறது, எல்பா புறப்படுவதற்கு! இதை எண்ணும்பொழுது அவனைச் சோகம் கப்பிக்கொண்டது. இச்சோகத்தை மறைக்க, எவ்வளவோ முயன்றான், பயனில்லை! ஒவ்வொரு விநாடியும் அவனது நண்பர்களைக் கண்டு கட்டியணைத்துப் பேசவேண்டும் என்ற ஆவல், அவனது விழிகளிலே நிறைந்து காணப்பட்டது. கடைசியாகக் கோர்ட் வந்தான். ''சிறகுகள் இல்லையே, எல்பாவுக்கு விரைந்து செல்ல என்று கவலைப்படுகிறேன். பிரான்சை உயர்த்தப் பெரும் திட்டங்களை உருவாக்கியிருந்தேன். காலம் இடந்தராத காரணத்தால் என் கனவுகள் காற்றிலே கட்டிய கோட்டைகளாகிவிட்டன! நாளை சரியாக 12 மணிக்கு வண்டியேறிவிடுவேன், எல்பா போவதற்கு!'' என்று கூறக் கேட்ட, கோர்ட் ஏது சொல்வது என்று அறியாது குழம்பிய உள்ளத்தோடு இருந்தான். அவனது நெஞ்சை ஏதோ ஓர் பாரம் அழுத்தியது.

1814-ம் ஆண்டு 20-ந் தேதி நெப்போலியன் புறப்பட்டுச்செல்ல வேண்டிய நாள். சரியாக 12 மணிக்குப் புறப்படப் போகிறான். ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. காலைப் பெரும் பொழுதில், நெப்போலியன் தனிமையாகவே இருந்தான். புறப்பட்டுச் செல்லவேண்டிய நேரம் நெருங்கிவிட்டது. கடைசி மரியாதை செய்யும் பொருட்டு, மாளிகை முற்றத்திலே அணிவகுத்து நின்றனர் வீரர்கள். தளபதிகள் அதை வக்கை செய்தபடியிருந்தனர். கூட்டு சக்திகளால், நியமிக்கப் பெற்ற அதிகாரிகளும் அமைதியோடு நின்றனர். அருகில் உள்ள நாடுகளிலிருந்து மக்கள், இக்காட்சியைக் காணவேண்டி வந்து நின்றனர். அங்கு நின்ற வீரர்களின் முகங்களில் சோகம் கப்பிக் கிடந்தது. இருள் படிந்திருந்தது!

அமைதியும் ஒளியும் முகத்தில் தவழ நெப்போலியன், மாளிகையின் மாடிப்படிகளில் வந்துகொண்டிருந்தான். அவனது வருகையைக் கண்ட அவனது வீரர்களின் மார்புகள், ஓங்கிப் பின்னர் தாழ்ந்தன. மயான அமைதி அந்த மாளிகை எங்கும் வழிந்து நின்றது. அணிவகுத்து நின்ற வீரர்களுக்கிடையே நெப்போலியன், இப்பொழுதுவந்து கொண்டிருந்தான். வலதுபுறமும் இடதுபுறமுமாகத் திருப்பிப் பார்த்த வண்ணம் வந்துகொண்டிருந்தான். தளபதிகளைத் தன் கரங்களால் கட்டியணைத்தான் அவர்களோ, கண்ணீரால் நெப்போலியனது கரங்களைக் குளிப்பாட்டினார்கள். மாளிகை எங்கும், வீரர்கள் விட்ட பெருமூச்சின் எதிரொலி! புறப்படுவதற்குத் தயாராக நின்றுகொண்டிருந்த வண்டியிடமும் நெருங்கிவிட்டான். அங்கிருந்து, வீரர்களின் அணிவகுப்பைப் பார்த்தபொழுது, அவனது பார்வை குழந்தை பார்ப்பதுபோல் இருந்தது. அவ்வளவு அமைதி இருந்தது அவனது பார்வையில்.

தளபதிகளே! வீரர்களே! தோழர்களே! உங்களிடையே இருந்து விடைபெறுகிறேன்—உங்களைவிட்டுப் பிரியப்போகிறேன் இருபத்தைந்து வருடங்களாகக் கீர்த்தியும் கித்தாப்பும் கொண்ட பாதையில் நடந்தோம். இப்பொழுதோ, அகில ஐரோப்பாவும் நமக்கு எதிர்ப்பாக இருக்கிறது. நம்மால் இன்னும் சண்டையிடமுடியும். ஆனால் அது பயன் தராது; மக்கள், மன மகிழ்வு கொள்ளமுடியாது, துக்கம் சூழ்ந்துகொண்டுவிடும். இது ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான், நான் உங்களைவிட்டுப் பிரிகிறேன். இந்நாட்டு மக்கள் மகிழ்ச்சியடைய வேண்டும் என்பதுதான் என் எண்ணம்'' என்று கூறியபொழுது அவனது குரல் கம்மியது. கடைசி வணக்கத்தைச் செய்துவிட்டு விரைவாக வண்டிக்குள் ஏறி அமர்ந்துகொண்டான். சோகமும், வேதனையும் அவனது தலையைத் தாழ்த்தியது. தன்னையுமறியாது தன் முகத்தை இருகரங்களிலும் புதைத்துக்கொண்டான். வீரர்கள் ஒவ்வொருடைய மார்பும் விம்மித் தாழ்ந்தது; அவர்களது கண்கள் குளமாகியது. வண்டியில் பூட்டப்பட்ட குதிரைகள் புழுதியை எழுப்பியபடி, புறப்பட்டுவிட்டன. எழுந்த புழுதியில் ஒரு மாவீரனின் ஆற்றல் மங்கி மறைந்துகொண்டிருந்தது.

அந்தக் காட்சி, மலையை அகழ்ந்தும், கடலைத் தூர்த்தும், காற்றின் இயல்பையடக்கியும், வல்ல ஆற்றல் பெற்றிருப்பினும், தன்னைப்போல் பிறரை நினையாது, அவர்களது உரிமையைப் பறித்திடவும், சுதந்தரத்தை அழித்திடவும் எண்ணுபவர்களுக்கு நல்ல பாடம் ஒன்றைப் போதிக்கும் வகையில் அமைந்துவிட்டிருக்கிறது! ★

ராணி...

— 6-ம் பக்கத் தொடர்ச்சி —

உடலில் அசைவே இல்லை. டாக்டருக்கு ஆள் அனுப்பினார்கள். டாக்டர் வந்தார். நாடியைப் பிடித்துப் பார்த்தார், உயிர் போய்விட்டது என்பதை அறிந்து கொண்டார். கத்தியைப் பார்த்தார். காயத்தையும் கவனித்தார். உண்மையான கத்திக் குத்து ஏற்பட்டுள்ளது என்பதைச் சொல்லிவிட்டார். இதற்குள் டைரக்டரை எங்கே என்று ஒருவர்க்கொருவர் கேட்டுக் கொண்டனர். ''கதாநாயகியைக் கொன்ற வில்லனைக் கொண்டு வாருங்கள்'' என்று உதவி டைரக்டர் கட்டளையிட்டார். வில்லனைக் கொண்டுவர இருவர் சென்றனர். மேக்கப் அறையில் வில்லன் தன் சினிமா உடைகளையும் மேக்கப்பையும் களைந்து கொண்டிருந்தான். வில்லனைத் தேடிவந்த இருநபர்களும் வில்லனின் உருவத்தைக் கண்ணாடியில் கண்டனர். என்ன ஆச்சரியம்! டைரக்டர் தனசேகரன் தான் வில்லன் வேஷம் போட்டிருக்கிறார். காரணம் வில்லன் மிருகநாதனாக நடிக்கும் சொக்கப்பா அன்று வரவில்லை,

இந்த விஷயம் ஸ்டுடியோ முழுவதும் காட்டுத் தீ போல் பரவிவிட்டது. போலீஸ் புலிகள் வந்துவிட்டனர். ராணியின் உடலைப் பரிசோதனைக்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டு டைரக்டரைக் கைது செய்தனர். டைரக்டருக்கு ஜாமீன் கொடுக்க எவரும் வரவில்லை.

நீதி மன்றத்தில் நீண்டநாளாக வழக்கு நடைபெற்றது. பின்னர் தீர்ப்பு அளிக்கப்பட்டது. தீர்ப்பு பின்வருமாறு: டைரக்டர், வில்லன் வேஷத்தில் வந்து, பொய்க் கத்தியால் குத்துவதற்குப் பதிலாக நிஜக் கத்தியாலேயே குத்தி, ராணியைக் கொன்றது கவனக் குறைவால் ஏற்பட்ட நிகழ்ச்சியாகும். இருப்பினும் ஓர் உயிர் கொல்லப்பட்டுவிட்டது குற்றமே. வில்லன் அன்று வராததால் தானே வில்லன் வேஷம் போட்டுக்கொண்டதாக டைரக்டர் தனசேகரன் சொல்வது பொருத்தமாகாது. வில்லனாக நடிப்பவர் வராவிட்டால் அன்றைய படப்பிடிப்பை ஒத்தி வைப்பதை விடுத்து, தானே வேஷமணிந்து ஓர் உயிரின் சாவிற்குக் காரணமாய் விட்ட தனசேகரனுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படுகிறது.

டைரக்டர் தனசேகரன் தண்டனையனுபவித்தாலும்கூட, தனது பழி வாங்கும் எண்ணம் ஈடேறிவிட்டதை எண்ணி மகிழ்ச்சிதான் அடைகிறார். வில்லனாக நடிக்கும் சொக்கப்பாவைச் சாமர்த்தியமாக அன்று வீட்டுக்கு அனுப்பிவிட்டு, தான் வில்லனாக வந்து ராணியைக் கொன்று தீர்த்ததைப் பிறர் அறியவில்லை என்பதை எண்ணும்போது அவர் மனம் ஆனந்தத்தால் துள்ளிக்குதிக்கிறது. பாவம்! டைரக்டர் தனசேகரனால் மேன்மையுறலாம் என்றெண்ணி அவர் சொற்படி நடந்த சொக்கப்பாவின் நிலைதான் பட உலகில் கலைக்கிடமாகிவிட்டது. ★

மதருஸ் க்ளோம் அண்டு சர்வீஸ் ஸிண்டிகேட்

P. B. No. 1004

No. 10-7, N. R. ரோட், சென்னை-17.

பொதுமக்களுக்கும் வியாபாரிகளுக்கும் ஓர் அரிய வாய்ப்பு.

சகல பொதுமக்களுக்கும் வியாபாரிகளுக்கும் கொள்முதல் விற்று முதல், ஏற்றுமதி இறக்குமதி வரை சகல வகையான வியாபாரக்காரர்களுக்கும், சர்க்கார் அதிகார பூர்வமான காரியங்களையும் வியாபாரிகளுக்காக இங்கே அவர்கள் வகையாக இருந்து செயலாற்றும் ஸ்தாபனம் இது.

இதன்மூலம் எல்லா ஊர்களிலுமுள்ள வியாபாரிகளும் அதிகப் பொருட்செலவும் கால நீடிப்பும் இல்லாமல் சுலபமாகத் தங்கள் வியாபாரத்தை விருத்தி செய்து கொள்ளலாம்.

வியாபாரிகளுக்குச் செலவில் சிக்கனமும் போக்குவரத்துச் செலவுகள் காலதாமதம் இரண்டும் குறைவதுடன், தாமதமன்னியில் விவரங்களைத் தெரிந்துகொள்வதற்கும் பெருஅநுகூலமாக இருக்கும் ஸ்தாபனம் மெட்ருஸ் க்ளோம் அண்டு ஸர்வீஸ் ஸிண்டிகேட்.

இவ்வரிய சந்தர்ப்பங்களை அனைவரும் எங்கள் ஸ்தாபனத்தின் மூலமாகப் பயன்படுத்திக் கொள்ளும்படி கோருகிறோம்.

— விவரங்களுக்கு: —

V. R. கிருஷ்ணன்,
மேனேஜர்.

மதருஸ் க்ளோம் அண்டு சர்வீஸ் ஸிண்டிகேட்,
P. B. No. 1004,
No. 10-7, N. R. ரோட்,
சென்னை-17.

◉

சிதம்பரம் ஜெயராம்,
தலைவர்.

K. சேஷாத்திரி, L. T. C.,
S. A. சங்கரலிங்கம்,
பங்காளிகள்.

எமது புதுநூல்கள்!

பன்மொழிப் புலவர்
★ கா. அப்பாதுரை M.A.L.T
வாழ்க 3-0-0
வளரும் தமிழ் 3-0-0
சரித்திரம் பேசுகிறது 3-0-0
மருதூர் மாணிக்கம் 3-0-0
★ நாரண துரைக்கண்ணன்
புதுமைப்பெண் 1-12-0
மேனகா 1-8-0
சதுரங்கம் 1-4-0
★ எஸ். எஸ். தென்னரசு
கண்மணி 1-0-0
தேவாலயம் 1-4-0
★ அருணன்
புதுவாழ்வு 1-8-0
இல்லற இன்பம் 1-0-0
தேவைக்கு எழுதுங்கள்!

அருணோதயம்
சென்னை-14

★ அன்னை அருங்குறள்! ★

1. அன்னை வணக்கம்

முன்னைப் பெருமையாம் பெற்றோங்க மூத்தமிழ் நல்
அன்னை தருக அருள்

பொருளும் புகழும் பொருவில் அறத்திருவும்
தெருளும் அருள்க சிறந்து

எப்பாலும் ஒப்பாம் முப்பால் வழிநின்றார்
இப்பால் எழுக இனிது

ஒருங்குறை வாழ்க்கை உடற்குறுப் பென்னயாம்
நெருங்குறத் தாராய் நிறைவு

ஒரு மயிர் போய் வாழாக் கவரிபோல் ஒரு மகன்
பெருமைகெட வேண்டேம் பிழைப்பு

பகடொன்று நைந்த சகடுறு வாழ்வற
மகடூஉப் பெறுகநல் வாழ்வு —

மன்மக்கள் போற்றிடு நன்மக்கள் ஆகுக
நின் மக்கள் நேர்ந்து நெறி

சாதிசமயச் சழக்கறுத் தென்றும்
பேதந் தொலைத்தருள் பீடு

நல்லார் வழிநின்ற வல்லார தாட்சியே
நல்லாட்சி யாயருள் நன்கு

2. தமிழ்நாடு

நாற்பொருள் வண்மை நானில மண்டிலம்
மேற்பொருள் காண்நால் விளக்கு

சோனகர் சீனர் யவனர் உரோமரொடு
வாணிபம் கொண்டதெம் வாழ்வு

நிலாப்போல் துகிலும் நெடுமணியும் முத்தும் உலகு
உலாப்போம் உயர்வுடை நாடு

நெற்றிக்கண் கண்டாலும் குற்றம் மறையாமற்
சொற்றிடும் வீறுடை நாடு

ஆற்றல் அறிவின் மிகையா அறம் அருளே
காட்டும் நெறியார் கனிந்து

ஆயிரம் வேட்டலிற் கொல்லாமை நன்றெனத்
தாயருள் காட்டும் தகைத்து

ஒன்றார் முடியோடு உடையான் அடி தேய்க்கும்
தன்னே ரிலாத்தமிழ் நாடு

கங்கையொடு ஈழம் கடாரம் கடன் கொண்டார்
வண்கை வழங்கினர் வந்து

எடுத்த பிறப்பும் ஈட்டுறு செல்வமும்
கொடுத்தற்கே என்பர் குறித்து

3. தமிழ்மொழி

மூவரசும் முத்தமிழும் முந்நான் மறைமுறையும்
தேவரசும் காணுத் திரு

யாத்த மறைமுன்னர் யாத்த இலக்கணத்தால்
மூத்த மொழிஎம் மொழி

பின்னை மொழிபல பேதுற்றழிந்தும் என்றும்
அன்னை புதியள் அறி

ஆய்ந்த இயல்கள் அருங்கலைகள் தூங்கச்
சாய்ந்து தரும்எம் தமிழ்

தெலுங்கோ டுறவு, திரள் மலையாளம், க(ன்)னடம்
ஒருங்கே உறவாம் உணர்

சோனகர்க்கும் சூழாரியர்க்கும் வண்சீனகர்க்கும்
தான் நடுவாய் நிற்கும் தமிழ்

அன்னை தமிழர்க்கன்றித் தமிழ்க் குழுவிற்(கு)
அன்னை தருமுன் அ(ன்)னை

ஊனாய் உயிராய் உயிர் நாடியாய் எல்லாம்
தானாகி நிற்கும் தமிழ்

இறந்தும் பிறவேம்; பிறப்பின், பிறமொழிக்கே
மறந்தும் பிறவேம் மதித்து

4. தமிழிலக்கியம்

திருவார் குறள்தானும் தெய்வச் சிலம்பணியும்
உருவாரக் கொண்டோம் உளம்

வானோக்கிக் கண்டேம் மணிமேகலை யணியும்
மேனோக்க இல்லேம் விழைந்து

வளையாபதி குண்டல கேசிகாண முற்றும்
இனையேம் தவம்செய் திலேம்

மங்கலச் சிந்தா மணிஒளி கண்டேம்
நங்குலம் வாழ நனி

அம்பொன் மணிசேர் அகலாரம் அன்னைமகிழ்
கம்பன் பரவும் கதை

மாலாயினன் திருமாலும் வளரிசைநல்
நாலா யிரமும் நயந்து

மூவருலவும் மூவரு லாத்தேர் கூத்தன்
தேவருலாவத் தந்தான் தேர்ந்து

அரண் இரிய ஆண்டு புகழ் அலைக்கங்கை யுய்த் தான்
பரணிசயங் கொண்டான் பணி

எனதென தென்ன இகலுஞ் சமயமெல்லாம்
தனதுன என்றிருப்பள் தாய்

5. தமிழிலக்கணம்

அன்னை உரு வரைந்தான் அகலக் கலையுடனே
முன்னீர் குடித்த முனி

வரைந்த உருவின் வனப்பெல்லாம் தந்தான்
சிதைந்த படங் கண்ட சேய்

ஒல்காப் பெருமைத் தொல்காப்பி யன்பணி
பல்காற் பரவல் பணி

தொன்னூல் ஒழியப் பின்னூல் அவற்றுள்
நன்னூல் பவணந்தி நூல்

மாசிகந்த ஐந்தும் விளங்க மதித்தளித்தான்
தேசிகப் பேரான் தெளிந்து

குட்டித்தொல் காப்பியமே யானால் அதுஇன்னும்
எட்டுந்தொல் காலத் தெழில்

ஐந்து திணையும் ஐந்தென் இலக்கணமும்
ஐந்து தருஎன்ன லாம்

தமிழ்க்குழுத் தன்மையும் சார்பும் மெய்கண்டான்
தமிழ்வாம் கால்டுவெல் தந்து

இயல் ஒலியி னோடு இயல் இலக்கணம் பெற்றான்
இயலணங்கின் முன்சேய் இயைந்து

6. தாய்த் துயர்

தாயெனிற் பேய்க்கும் உணர்வுண்டு; தாய்மறந்த
சேய்க்கென் உரைப்பம் எதிர்?

முந்து மொழிஎம் தமிழ்மொழி பேணார்
பிந்துமொழி கொணர்ந்தார் போர்த்து

அயல்மொழிக்கே என்றும் ஆளாக லானார்
உயல் வழி நின்றார் உவந்து

மேலென்பர் இம்மொழியும் அம்மொழியும் செந்தமிழ்
கீழென்று காட்டக் கிளர்ந்து

அயல்மொழி செல்லா விடினும் அயற்சொலால்
மயல்மொழி கொள்வர் வலிந்து

தமிழர் த(ம்)முள் தம்தகை நாட்ட ஆங்கவரை
அமிழ்த்தல் விழைவார் அனைந்து

பகையொடு சேய் உறழப் பதைத்தாள் பதைத்தன்னை
திகைத்தாள் த(ன்)னுவி சிதைந்து

சச்சரவுட்பட்டு மக்கள் சதியால் அழிந்தார்
நச்சரவுண்டார் போல் நலிந்து

மொழிபயந்த மூதன்னை மொழிகளிடைக் கிடந்தாள்
விழிசோர வெய்துயிர்த்து வீழ்ந்து

பன்மொழிப்புலவர்

கா. அப்பாதுரை. M.A.L.T

மதுரைவீரன்

'மதுரைவீரன்,' கதை வசனப் புத்தக உரிமையை சென்னை ஸ்ரீமகள் கம்பெனியாருக்குக் கொடுத்துள்ள படியால், நண்பர்கள் அவர்களுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளவும். காரைக்குடி கண்ணதாசன் பதிப்பகத்திற்கு பணம் அனுப்பியவர்களுக்கும் கடிதம் எழுதியவர்களுக்கும், ஸ்ரீமகள் கம்பெனியிலிருந்து புத்தகம் அனுப்பப்படும்.

நிர்வாகி:
கண்ணதாசன் பதிப்பகம்.

வெண்பாப் போட்டி

26. சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்!

வெண்பாப்போட்டி 26-ன் பரிசுபெற்ற வெண்பாவையும், ஏனைய தகுதியுடைய வெண்பாக்கள் சிலவற்றையும் சென்ற இதழில் வெளியிட்டோம். இந்த இதழில் மேலும் சில தகுதியுடைய வெண்பாக்களை வெளியிட்டுள்ளோம்.

கன்னித் தமிழ்நாடு காளையரின் தோள்வலியால்
இன்னல் பலதீர்த்தே ஏற்றமுறும்-அன்னவர்தோள்
வீழ்ச்சியுறச் செய்வோரை வேரறுத்தே ஆரியத்தின்
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.

—இறைமணி, உலகாட்சிக்காடு.

★

"அத்தானிந் நாளாய் அயல்நாடு சென்றுவந்தீர்
பித்தானேன் வாய்திறந்து பேசீரோ?"-"முத்தழகி!
வீழ்த்தினரோ தென்னாட்டை!! விம்மித் தினவுறு(து)என்
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.

—மணக்கரை-அம்பலவாணன், அயன்வரம்.

★

உத்தமரைக் கொன்றே உலுத்தரைக் கைகுலுக்கிச்
செத்தகதை பேசும் செகத்தீரே!-புத்தமுதாய்த்
தாழ்வுயர்வு போக்கிடவே காண்பீர் திருநாட்டின்
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.

—ஏ. சிவா, தோட்டப்பாளையம்.

★

வீரம், வளர்காதல், வெஞ்சமருக் கஞ்சாத
தீரம், தளராத தாளாண்மை-சேர்கின்ற
வாழ்வு தனைப்பெற்று வையத்துக் கீவதெலாம்
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்

—க. பொழிலன், சென்னை-11.

★

தாழ்த்தும் வடவர்காள்! தத்தித்தோம் போட்டுலழும்
சூழ்செய்தித் தாள்காள்!எச் சூழ்ச்சியும்-வீழுமன்றோ?
ஏழ்கடல் வையகத்தில் எந்தமிழ்தோள் என்றென்றும்
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.

—ச. த. வேலன், பந்தல்குடி.

★

தேவிகுளம் பீர்மேட்டைச் செந்தமிழர் காவியத்தைப்
பாவியரின் பாதம் பணித்தாரோ?-பூவிழியாய்!
வீழ்ச்சியினால் ஆவி விலகிடினும் தாளாதெம்
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.

—ப. தாமரைச்செல்வன், உடுமலை.

★

மேழிதனைத் தூக்குந்தோள் வேல்வேந்தர் கோக்குந்தோள்
ஆழி தரித்தே அருளும்தோள்-சூழ்வினையை
வீழ்த்தும்தோள் என்றும் நிலைக்கும்தோள்; நீடூழி
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.

—கோ. முருகேசன், நாயகனைப்பிரியாள்.

★

கன்னித் தமிழ்நாட்டைச் சூழ்ச்சியினாற் கைப்பற்றிப்
பொன்னான கொள்கை புதைத்திட்டார்-அன்னவரை
வீழ்த்திடுவோம் காண்போம்நாம் வெற்றியினை; உண்டெமக்குச்
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.

—சி சத்தியமூர்த்தி, இடையன்சாவடி.

★

சூதுருவாம் ஆரியரைச் சூழ்ந்து முறியடிப்பேன்
வாதுசெய்யும் வம்பரையும் வாட்டிடுவேன்-மாதேகேள்
ஊழெதிர்த்து வந்தாலும் ஊசலாடா தென்திண்டோள்
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.

—சி. எஸ். நாதன், ஊத்தங்கரை.

ஈந்துமகிழ் தன்மையதில் இன்தமிழில் நேர்மதியில்
ஏந்துமுயிர் நல்லறத்தில் இன்பியலில்-ஏந்தெழிலை
வாழ்த்துதலில் வண்புகழில் மாண்புடைத்தே விற்றமிழன்
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.

—அ. இரத்தினசாமி, கோவிலூர்.

★

இந்தி தனைப்புகுத்தி இன்தமிழை மாய்த்திடவே
எண்ணி அலைவார் இடர்செய்வார்-வன்செயலை
வீழ்த்தி முறியடிப்போம் வெல்வோம் நமக்கிலையோ
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.

—குகன் குருசாமி, கமுதி

★

அறிவுமிழும் கண்ணிரண்டும்; ஆர்வமிகும் பேச்சில்
உறுகொள்கை நெஞ்சகத்தே உண்டே-பொறைதிகழும்
காழ்ச்சிந்தை! தாயகத்தைக் கட்டறுத்து, வீணர்களின்
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.

—இரா. அருணகுமார், பரமக்குடி.

★

எந்தவிதக் கொள்கையையும் ஏற்றுப் பகுத்தறிந்து
சிந்தையிலே வைக்கும் திருக்குணமும்,-வந்தடையும்
தாழ்ச்சிகளில் நெஞ்சம் தளராப்பே ராண்மையுமே
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.

—குரு. மாரியப்பன், பி. ஏ. புதுப்பட்டி.

★

தஞ்சமென வந்தோர்க்குத் தம்மையே தந்துவப்பார்;
வெஞ்சமர்க்(கு) அஞ்சார்; வெறுத்திடுவார்-வஞ்சத்தை;
வாழ்த்தும் குணமிக்கார் வண்டமிழர் வைரத்தோள்
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.

—செ. கா. அருணாசலம், செட்டிபாளையம்.

★

வேழம் விழ வெறியும் வேல்தடக்கை, மானமழு
தாழவரின் வாழாத தன்னுயிர்-வாழவெண்ணித்
தாழ்வுசெயாத் தண்டமிழர் தோள்கண்டாய்
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.

—ந. ஜாபர், தேவத்தூர்.

★

கூடுபகை வென்றதோள் குற்றத்தை ஓத்ததோள்
நீடுபுகழ் நற்றமிழர் நீள்தடந்தோள்-நீடுகேள்
வீழ்ச்சியெதும் கண்டறியா வெற்றித்தோள் அத்தோளே
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.

—புரட்சிவேலன், கோத்தகிரி.

★

படைதிரண்டு நிற்கிறது பாரம்மா! வேறு
உடைமாற்ற நேரமும் உண்டோ? விடைதருவாய்;
ஆழ்ந்து நீ சிந்தித்தல் ஆகாதே, உன்மகன்தோள்
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.

—எம்மார்க்கே, ஊத்தங்கரை.

★

வீழ்ச்சியுறு தாயகத்தில் வெற்றி மலர்ச்சிபெற,
தாழ்ச்சிகொளும் உள்ளத் தகைமையோர்-வீழ்ச்சியுற
சூழ்ச்சிறிதே யுண்டாலுங் கொள்வாய் திருவிடமே!
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.

—தொல்காப்பியன், அகரப்பேட்டை.

★

பண்டைத் தமிழ்நாட்டின் பண்பாடும் நல்வாழ்வும்
இன்றை இழிநிலையும் எண்ணத்தில்-கொண்டுணர்ந்து
பேச்சும் செயலாலும் பேயர்தம் வஞ்சகஞ்சேர்
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.

—பி. ஆர் சின்னகிருஷ்ணசாமி, அப்புபாளையம்.

★

பற்றார் முனை கெடுத்துப் பாரோர் புகழ்ந்திடவே
வெற்றி பல புனைந்த வீரர்கள்-பெற்றுள்ளார்
வீழ்ச்சியுற முயற்சி செய்யும் வீரவார்தன்
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.

—ப. சண்முகம், திருவிடைமருதூர்.

★

அஞ்சல் முழுமதியே! ஆவி பிரிந்தாலும்
நெஞ்சம் உனைவிட்டு நீங்காது-பஞ்சையரின்
சூழ்ச்சிகளை நீகண்டு சோராதே; என்தோள்தான்
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.

—கிரந்தை, துறையூர்.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6.